ஓம்

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவஹு தைமீ ௧௯௨ (1936 ஜனவரி 27) திங்கட்கிழமை { இலகம்—எக

# இற்றலியர் அடைந்த ஏமாற்றம்

## அபிசீனிய மன்னரின் மருகன் தந்திரம்.

### அவர் விசிய மாய வலையில் இற்றலி விழ்ச்சி. சரண்புகுந்ததன் இரகசியம் என்ன?

### தந்திரோபாயத்தால் தடுமாறும் முசோலினி உயிரைத் தியாகம் செய்யும் உத்தம வீரன்

"ஈவினிங் ஸ்டாண்டர்ட்' பத்திரிகையில் கீழ்க்கண்ட செய்தி பிரபலமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அபிசீனிய சக்கரவர்த்தியின் மாப்பிள்ளையான ராஸ்குக்ஸா இத்தாலியரிடம் போய்ச் சேர்ந்து கொண்டது ஒரு தந்திரமென்று நம்பத்தகுந்த செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இத்தாலியரிடம் ராஸ்குக்ஸாவை அபிசீனிய சக்கரவர்த்தியே போகப் பணித்தார்.

இந்த வரலாறு அபிசீனிய மக்களின் கர்ண பரம்பரை வரலாறுகளில் ஒன்றாக என்றென்றும் விளங்கும்.

யுத்தமாரம்பமானால் சாதாரணமாக ஜுடாசிம்மமான அபிசீனிய சக்கரவர்த்தி தள்ளியெழுந்து போர் முனைக்குப் போவது வழக்கம்; முசோலினி தம் சைந்யங்களையும் அபிசீனியாவுக்குள் அனுப்பிய போது அபிசீனிய சக்கரவர்த்தி போர் முனைக்குப் போகவில்லை.

அவர் தலை நகரத்திலேயே தங்கியிருந்து தமக்குக் கீழ்ப்பட்ட பிரதானிகளை யெல்லாம வரவழைத்தார் அவர்கள், சக்கரவர்த்தியிடம் விசுவாசமாயிருப்பதாக உறுதி கூறினார்கள். எதிரிகளைக் கண்ட துண்டங்களாக வெட்டித் தீர்த்து விட வேண்டுமென அவர் உத்தரவிட்டார் இதற்காக மாத்திரம் அவர் தலைநகரில் தங்கவில்லை. உலக அபிப்பிராயம், சர்வதேச சங்கத்தின் போக்கு முதலியவை அவர் மனதில் பலவகைப் பட்ட எண்ணங்களை உண்டு பண்ணின வென்று அவர் கண்கள் காட்டின.

உலக அபிப்பிராயத்தைத் தமக்குச் சாதகமாகத் திருப்பும் நோக்கத்துடனும் இத்தாலியில் உணர்ச்சியை உண்டு பண்ணும் நோக்கத்துடனும் தன் குமாரர்களும் மாப்பிள்ளையும் எதிரிகளைக் கொல்லப் புறப்பட்டிருக்கின்றனரென்று முசோலினி அறிவித்தார்.

அபிசீனிய சக்கரவர்த்தியின் குமாரனுக்குப் பன்னிரண்டு வயது; அவர் மாப்பிள்ளை ராஸ்குக்ஸா பெரியதிரன் அவரை சக்கரவர்த்தி ரகசியமாக வரவழைத்தார்,

"என் அன்பார்ந்த ராஸ்குக்ஸா, 'மரணத்தில் உனக்குப் பயமுண்டா'" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

'இல்லை', என்று குக்ஸா பதிலளித்தார்.

சக்கர:—இத்தாலியரை யெதிர்க்க நம்மிடம் விமானங்களாவது டாங்குகளாவது இல்லை. மூளையும் துணிவுமே நமக்குச் சகாயம் செய்யவேண்டும். நீ சில தலைவர்களுடன் ஆக்ஸுமுக்குச் சென்று இத்தாலியரிடம் சரண் புகுந்துவிடு. அப்படியாயின் சைந்யத்திற்குள் நீ எளிதாகக் கலகத்தை உண்டு பண்ணி விடலாம். சேர்ந்திருந்தே இத்தாலியரை வஞ்சித்து நாம் பழிவாங்கி விடலாம்.

ராஸ்குக்ஸா ஒப்புக் கொண்டார்: இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாயின. அடோவா வீழ்ச்சிக்குப் பிறகு ராஸ்குக்ஸா தங்களிடம் சரண்புகுந்து விட்டதாக இத்தாலியர் விளம்பரப் படுத்தினார்கள். தாங்கள் ஜெயிக்க முடியாதென்று அபிசீனியர் உணர்ந்து விட்டதாகவும் இத்தாலியர் பிரசாரம் செய்தனர். போனோ சேனாதிபதி ராஸ்குக்ஸாவை வரவேற்றார். ராஸ்குக்ஸா ஒரு பிரதேசத்தின் அதிபதியாக்கப்பட்டார். அவருக்கு அபிசீனிய சாம்ராஜ்பத்தையே அளிப்பதாகவும் இத்தாலியர் கூறினர். ராஸ்குக்ஸா நன்றி தெரிவித்தார்.

சத்துருக்களிடையில் ராஸ்குக்ஸா தம் வேலையைத் தொடக்கினார். வேலை ஆபத்தானது. ரகசியம் வெளியாகிவிட்டால் மறு நிமிஷமவருக்குச் சாவு நிச்சயம்.

ராஸ்குக்ஸா மனக்தளராமல் வேலை செய்து வந்தார்.

பிறகு வியக்கத்தகுந்த செய்திகள் வரவாரம்பித்தன அபிசீனிய சக்கரவர்த்தியின் முக மண்டலத்தில் புன்னகை கனிழ்ந்தது. தம் மாப்பிள்ளையின் துணிவை அவர் மெச்சினார்.

இத்தாலியருடன் சேர்ந்திருந்த சுதேசிகள் படைபடையாக அபிசீனியரிடம் வந்து சேர்ந்தனர். 18 அஸ்காரி அதிகாரிகளும 125 சிப்பாய்களும் அபிசீனியர் பக்கம் போய்ச் சேர்ந்துவிட்டதாகச் சமீ

(தொடர்ச்சி 7ம் பக்கத்தில்)

## அரிய திருப்பணி.

### மறவன் புலோ கணேசராலயம்.

### அபிமானிகளின் முயற்சி

நிகழும் யுவ ஆண்டு தைத்திங்கள் 6-ம் நாள் (19-1-36) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் வள்ளம்தளம் கணேசராலய மண்டபத்தில் ஷை சபையின் மூன்றவதாண்டு ஆரம்ப விழா இந்துக்கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும் இந்துசாதனப் பத்திராதிபருமாகிய சைவத் திருவாளர் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் தலைமையில் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயது. அவ்வமையம் தலைவர் தமது முன்னுரையில், "மறவன்புலோ"வின் பழமையையும் கணேசராலயத்தின் பெருமையையும் பாராட்டிப் பேசினர். பின் காரியதரிசியால் அறிக்கைப் பத்திரம் வாசிக்கப் பட்டுச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டதும், தனாதிகாரியால் இரண்டாவதாண்டு வரவு செலவு விபரம் வாசிக்கப் பட்டது. தலைவர் திருப்பணியாளர் சபை இவ்வித சிறந்த முறையில் கணக்குகளையும் ஏனைய காரியங்களையும் நடைமுறையிற் கொண்டுவந்திருப்பதைப் பாராட்டி இவ்வித சிறந்த சபைக்குத்தான் இதுவரையும் பொருள் உதவாதிருந்தது தவறுதுமென்னுங் கருத்துப்படப் பேசி சபையார் முன்னிலையிலேயே ஷை சபைக்கு 2 ரூபா உவந்தளித்தனர். பின் பரமேஸ்வராக்கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும் சைவப்பிரசாரகருமாகிய சைவத் திருவாளர். த குமாரசுவாமிப் புலவர் அவர்கள் "அப்பூதியடிகளின்" திவ்விய சரித்திரத்தை ஆராய்ச்சி முறையில் இன்னிசை பொருந்திய பாக்களோடு விரிவுரை செய்தார். அத்துடன் தாம் இச்சபைக்கு பொருள் உபகரியாது இவ்வுலகில் வாழ்ந்தது தப்பு என்னுங் கருத்தமையப் பேசி 2 ரூபா உடனே உவந்தளித்தனர். பின் தலைவர் அவர்கள் "சைவ சமயிகளின் கடமை" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு பல எடுத்துக் காட்டுகளுடன் சிறந்த செந்தமிழ் நடையில் விரிவுரை செய்தார். பின் ஷை சபையின் நிரந்தர தலைவர் ஸ்ரீமாந் மு. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைவர் அவர்கட்கும் புலவர் அவர்கட்கும் சமுகமளித்த சைவ நன்மக்கட்கும் சபையின் சார்பாக நன்றியறிதல் கூறினர். இரவு 11 மணியளவில் தேவார பாராயணத்துடன் சபை இனிது கலைந்தது.

## போக்குவரத்துப்பகுதி மந்திரியின் புதுநியமனம்.

இப்போது போக்குவரத்துப் பகுதி மந்திரியாயிருக்கும் மிஸ்டர் H. M. மக்கான் மாக்கார் அவர்களை மின்சாரப்பகுதிச் சபையின் தலைவராக நியமிக்க ஆலோசனையிருந்துவருகிறதாகத் தெரிகிறது.

## சவர்க்காரத்தாற் கொலை!

### கீரிமலை மார்க்கத்தில் அப்போதிக்கரி கொலை தமிழ் தெரியாத சிங்களவன் சாட்சியம்.

### கல்லால் எறிந்தும் பொல்லால் அடித்தும் மாணம்! நீதிஸ்தலத்தில் விசாரவண விபரம்.

(நமது நிருபர்)

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த செல்லையா பஞ்சாட்சரம், தம்பையா செல்லையா, பொன்னையா நாகலிங்கம் நாகலிங்கம் கனகரெத்தினம், பொன்னையா கந்தையா என்னும் ஐவரும், அரசாங்க அப்போதிக்கரி இராசையா என்பவரைக் கொலைசெய்தனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டனர்.

பொலிஸ் உதவிப்பரிசோதகர் Z. கானும் பிறக்டர் ஸ்ரீ S. A சபாபதியும் வழக்கை நடாத்தினர் மிஸ்டர் V. ஜோசப், ஸ்ரீ T. C. இராஜரத்தினம் எதிரிகளுக்காக ஏற்பட்டனர்.

### சாட்சியம்.

விசாரணையின்போது இறந்த இராசையாவின் வேலைக்காரனாயிருந்த குணவர்த்தன என்னும் சிங்கள வாலிபன் பின்வருமாறு சாட்சியம் கூறினான்.

"சென்ற 8ம் தேதி காலை, ஸ்நானம் செய்யும்பொருட்டு நானும் எனது எசமானும் கீரிமலைக்குப் புறப்பட்டோம். நாங்கள் கிணற்றடியில் இருந்து 15 யார் தூரம் வரை போன பின், எம் பின்னால் ஓர் மனுஷன் வந்து, எனது எஜமானுடன் ஏதோ தமிழிற் பேசினார். அவர் உரத்துப் பேசினார். ஸ்ரீ இராசையாவும் திரும்பி மறுமொழி சொன்னார் அவர்கள் என்ன பேசினர் என்பது, எனக்குத் தமிழ் தெரியாமையினால் விளங்கவில்லை.

"பின்னர், அதே திசையில் இருந்து கத்தியும் கையுமாய் ஒரு மனுஷன் வந்தான் இன்னொருவன் பொல்லும்கல்லும் கொண்டுவந்தான் கத்தியை வைத்திருந்தவர் அதனை இராசையாமீது ஓங்கினார். ஸ்ரீ இராசையா அக்கத்தியைப் பிடுங்க முயற்சித்தார் ஆனல் அது வாய்க்கவில்லை. அவருடைய கைவிரல்கள் அறுபட்டுப்போயின. இத்தநேரத்தில் கல்லும் பொல்லும் வைத்திருந்த மனுஷன், ஸ்ரீ இராசையாவை நோக்கிக் கல்லால் எறிந்தான். கல்லு அவரின் தலையிற் பட்டது. உடனே அவர் கீழே வீழ்ந்தார்.

"இதன்பின்னர், முதல்வந்து பேசப்பட்ட மனுஷன் ஸ்ரீ இராசையாவின் தலையில் ஓர் பொல்லால் அடித்தார். இதற்கிடையில் மற்றுமூவரும் சேர்ந்து எனதுஎசமானை அடித்தனர்

"நான் இக்கோர சம்பவத்தை, ஓடோடியும் சென்று எனது எஜமான் வீட்டில் அறிவித்தேன். உடனே அவரது மைத்துனன் வைத்தியலிங்கம் என்பவர் அவ்விடத்திற்குவர அவர்க்கும் அடி வீழ்ந்தது.

"ஸ்ரீ இராசையா, பின்னர் அறிவிழந்த நிலைமையில் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

### கிணற்றில் தொந்தரவு.

இதுசம்பவம் நடக்க முதனாள், நான் ஸ்ரீ இராசையாவுடன் வீட்டிற்குத் திரும்பினேன். அப்போது அவரின் மனைவியார் கிணற்றில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தார். அப்போது, ஸ்ரீ இராசையாவைக் கத்திகொண்டு தாக்கியவனும் குளிக்கப் போனான். இதைக்கண்ட இராசையா மனைவி கிணற்றுக்கட்டிற் சவர்க்காரத்தை விடுத்து, அப்பாற் சென்றுவிட்டார். இராசையாவின் மகன் சவர்க்காரத்தை எடுத்தற்காகச் சென்று பார்த்தபோது, அதனைக் காணவில்லை.

"அப்போது கேற்றுக்குச் சமீபமாக நின்ற இராசையா, இங்கே கள்வர் பெருந்தொகை: இவர்களினின்றும் தப்புதல் முடியாது" என்றார். இந்த வார்த்தைகள் குளித்துக் கொண்டு நின்றவன் காதில் விழ அவன் ஏதோ உரத்துப்பேசினான் இராசையாவும் உரத்துப் பேசினார். இதன்பின்னர் இருவரும் கட்டிப் பிடித்துப் புரண்டனர்."

இன்னும் சில சாட்சிகளை விசாரணை செய்தபின், நீதிபதி விசாரணையைத் தவணையிட்டார்.

## அரசாங்க விடுதலைநாள்.

மன்னர்பிரான் பிரேதம் வருகிற செவ்வாய்க்கிழமை அடக்கம் செய்யப்படும். அன்று இலங்கையில் அரசாங்கக் காரியாலயங்கள் யாவும் மூடப்படும்.

## 1102 மோட்டார்விபத்துக்கள்

1935-ம் ஆண்டில் இலங்கையிலே எல்லாமாக 1102 மோட்டார் விபத்துக்கள் நேர்ந்திருக்கின்றன வென்று பொலிஸ் அறிக்கை ஒன்று கூறுகிறது.

## கதிரைமலைக் கதிர்வேற் பெருமான்மீது பாடப்பட்ட நூல்கள்.

[ சே. இராசநாயக முதலியார் குறித்தது ]

1 கதிரை கிரோட்டகயமகவந்தாதி (வடகோவை ச. பரமசாமிஐயர் இயற்றி கி. பி. 1894–ல் பதிப்பித்தது.)

2 கதிர்காம வந்தாதி (மேலைப் புலோலி சு. வெற்றிவேலுப்பிள்ளை இயற்றி 1915-ல் பதிப்பித்தது)

3 கதிரையந்தாதி, கதிரைப்பதிகம், கதிரைக்கண்ணிகள், கதிரையகவல் (வதிரி சிவ. பஞ்சாட்சரக் குருக்கள் இயற்றியன. 1915-ல் பதிப்பு)

4 கதிர்காமசுவாமி மும்மணிமாலை (ஷையார் பதிப்பு 1918)

5 கதிர்காமஜீவகாருண்ணியயமாலை (ஆலத்தூர் V. R. இராமலிங்க உபாத்தியாயர் இயற்றியது 1933 பதிப்பு)

6 கதிர்காம மெய்ப்பொருள் மாலையும் கதிர்காம ஆனந்தக் கும்மியும் (விருதுநகர் K. P. சந்தானலமயாபிள்ளை இயற்றியது 1928-ல் பதிப்பு)

7 கதிர்காமவேலர் தோத்திரப்பாமாலை (க. செல்லம் உபாத்தியாயர் இயற்றியது 1912ல் பதிப்பு)

8 கதிர்காமசுவாமி பேரில் தோத்திரப்பாமாலை (வட்டுக்கிழக்கு ப. வைரமுத்து இயற்றியது 1927–ல் பதிப்பு)

9 கதிரைநாயகர் விண்ணப்பமாலை (வடகோவை ச. பரமசாமி ஐயர் இயற்றியது.

10 கதிர்காமசுவாமிபேரில் கிளிக் கண்ணி (வட்டுக்கோட்டை ப. வயிரமுத்து இயற்றியது 1928 ல் பதிப்பு)

11 கதிர்காமஸ்வாமி தோத்திரம் (புலோலி த. காசிநாதசர்மா இயற்றியது 1932-ல் பதிப்பு)

12 கதிர்காமநாதர் தோத்திரப்பா (அச்சுவேலி ஆ வேலாயுதபிள்ளை சோதிடர் இயற்றியது, 1922-ல் பதிப்பு)

13 கதிர்காமம் மாணிக்கப்பிள்ளையார் திருவருட்பா கதிர்காமவேலர் திருவருட்பா & கதிர்காமவேலர் திருவருட்டிறம் (திருநெல்வேலி திருஞானசம்பந்தப் புலவர் இயற்றியன 1904-ல் பதிப்பு)

14 காசிக்கதிர் காமவேலர் திருவட்பா (காசி சிவஞானதேசிகர் இயற்றியது நல்லூர் சதாசிவம் பிள்ளை பதிப்பு)

15 கதிர்காமக் கந்தன்பேரில் திருவிருத்தங்கள் (உடுத்துறை கந்தையா ஆறுமுகம் இயற்றியன 1932 ல் பதிப்பு)

16 கதிரமலைக் குறவஞ்சி (காதலைப் புலவன் விநாயகர் இயற்றியது)

17 கதிர்காமசுவாமிபேரில் பேரின்ப ஞானக்குறமும், ஆனந்தக்களிப்பும் தியானமும் (வட்டுக்கிழக்கு ப. வயிரமுத்து இயற்றியன 1928ல் பதிப்பு)

18. கதிர்காமசிவஷண்முகதிருமந்திர கவசம் (அருணகிரிநாதர் இயற்றியது மாத்தளை ஸ்ரீலங்கா ஸ்ரீபிரசில் 1927 ல் பதிப்பு)

19 கதிரமலைப் பேரின்பக்காதல் (ப. துறை ச. சோமசுந்தரஐயர் இயற்றியது 1920 ல் பதிப்பு)

20 ஷ (வல்லுவெட்டித்துறை பழ கனகசபை இயற்றியது-1922 பதிப்பு)

21 ஷ (தும்பைநகர் சோ. வைத்தியநாதையர் ஷ ஷ )

22 ஷ (வல்வை வ. மு. கந்தசாமி ஷ 1924 ல் ஷ )

23 கதிரை அடைக்கலப்பத்து கொழும்பு வெற்றிவேலு சுப்பையா ஷ 1901 ஷ ;

24 திருக்கதிர்காமப்பதிகமும் நாமத்திரப்பதிகமும் (மேலைபுலோலி சு. வெற்றிவேற்பிள்ளை இயற்றியன 1915 ல் பதிப்பு)

25 கதிரமலைவேலர்பதிகம் (சங்கானை த. பொன்னையா இயற்றியது 1923 ல் பதிப்பு )

26 கதிரமலைவேலர் பதிகம் (கலாலி க. சோமதிந்தாப்புலவர் இயற்றி 1921 ல் ஷ

27. கதிரையம்பதிக் கந்தவேள் பதிகம் (திருக்கோணமலை கா. பசுபதிப்பிள்ளை ஷ 1929 ஷ )

28 கதிர்காம நாதர்வருகைப் பதிகமும் கீர்த்தனையும் (திருக்கோணமலை வி. வேலாயுதபிள்ளை இயற்றியது. 1921 ல் பதிப்பு)

29 கதிர்காமக்கடவுளின் காரணக் கவிதை (மாத்துறை செயினுல் ஆப்தீன் முஹம்மது காசிம் இயற்றியது 1931 ல் பதிப்பு)

30 கதிரை நாதன் விநோதகானப (P. T கந்தசாமி இயற்றியது 1930 ல் பதிப்பு)

31 கதிர்காம வழிநடை ஆனந்தப் போதம் (கீர்த்தனை) (நல்லொகாலை ம. கா. ரா. தாத்தமுத்து இயற்றியது 1933 ல் பதிப்பு)

32 ஷ ஆனந்தச்சிந்து (முருகூர் மு வயித்தியலிங்கப்பிள்ளையும் செபமீகத்தம் ஆ. பொன்னையாவும் இயற்றியது 1933 ல் பதிப்பு)

33 ஷ சிங்காரம் (கந்தப்பளை கள்ளாக்குலம் K. முத்தையா இயற்றியது 1933 ல் பதிப்பு)

34. கதிர்காமக் கீர்த்தனை (கதிர்காம இராஜாசுவாமி இயற்றியது. 1934 ல் பதிப்பு)

35 கதிர்காமக் குகமயக் கீதம் (பிச்சாண்டிதாஸ் ஷ 1931 ஷ )

36 கதிர்காமகந்தன்மீது அன்புரசக்கீர்த்தனம் புலோலிகிழக்கு கசபாரத்தினம்பிள்ளை இயற்றியது 1927 ல் பதிப்பு

37 கதிரைநாயகர் கீர்த்தனம், வடகோண கா. பரமசாமிஐயர் இயற்றியது.

38 கதிரைநாதன் அலங்காரத்தங்கரத்தினப்பாட்டு தோட்டாறு கா சிவகாமிநாதன் இயற்றியது 1931 பதிப்பு.

39 கதிரமலை முருகப்பெருமான் மீது பக்திரசபஜனாமிர்த கீர்த்தனம் டிக்கோயா சி. தா. வடிவேல பண்டிதர் இயற்றியது. 1934 ல் பதிப்பு

40 கதிரையாத்திரை விளக்கம் நல்லூர் விநாயகமூர்த்திச் செட்டியார் இயற்றியது, கதிர்காம வேலவர் கீர்த்தனம், நல்லூர் ஆறுமுகரவலர்பாடியது நல்லூர் கந்தர் கீர்த்தனம் பரமானந்தப்புலவர் பாடியது இவை யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பெற்றுள்ளன.

41 கதிர்காமயாத்திரை வண்ணை நா. வை. தியாகராஜா இயற்றி கதிர்காமத் திருப்புகழுடன் 1924 ல். பதிப்பு.

42 கதிர்காமயாத்திராதீபம் கற்கையம்பதி சி. சுப்பிரமணியம் இயற்றியது. 1922 ல் பதிப்பு

43 கதிரைமகத்துவம் 2 ம் பாகம் P. M. செல்லையா இயற்றியது. 1933 ல் பதிப்பு.

44 கதிர்காமபுராணம் (வசனநடை) சி. தாமோதரம்பிள்ளை வித்துவான் இயற்றியது 1913 ல் பதிப்பு

45 கதிர்காம புராணம் (செய்யுள்)

வதிரி வித்துவான்
சி. நாகலிங்கபிள்ளை இயற்றியது.
(1935-ம் ஆண்டிற் பதிப்பு)

### புதிய அரசர் நியமனம் பற்றிய அறிக்கை.

எழாவது எட்வர்ட் மன்னர் சட்டபூர்வமாக அரசராக்கப்பட்டமையை, நமது இலங்கைத் தேசாதிபதியவர்கள் முறைப்படி இலங்கைப் பிரமுகர்கள் சமுகத்தில் அறிக்கை செய்து, இராசவிசுவாசப் பிரமாணிக்கம் செய்தார்.

### மன்னர்பிரான் பிரேத அடக்கம்.

எமது காலஞ் சென்ற 5வது மன்னர் பிரேதம் வருகிற புதன்கிழமையன்று லண்டன் வென்ற் மினிஸ்ராரில் எழாவது எட்வர்ட் மன்னரின் பிரேதத்திற்கருகே அடக்கம் செய்யப்படும்.

## சினிமாக் குறிப்புக்கள்

(A. K. S.)

### ராதா கல்யாணம்.

சென்னை மீனாட்சி பேசும் படக்காட்சிக் கம்பனியாரால்எடுக்கப்பட்ட ராதா கல்யாணம் என்னும் தமிழ்ப்பேசும் படம் இப்போது நீகல் மண்டபத்திற் காட்டப்படுகின்றது. இதில் மாஸ்ரர் இராஜப்பிரமநி K S தேவுடுஐயர் ஸ்ரீமதி சந்தானலக்ஷ்மி என்பவர்கள் நடிக்கின்றனர். ஸ்ரீ தேவுடு ஐயரின் சங்கீதம் இதில் உச்சநிலை அடைந்திருக்கின்றது. இப்படம் நன்றாக எடுக்கப்பட்டிருக்கிறது. இயற்கைக் காட்சிகள் மெச்சத் தகுந்தன

### மிருச்சகடி.

சூத்ரகன் என்னும் வடநாட்டு மகாகவியால் இயற்றப்பட்ட மிருச்சகடி அல்லது வசந்த சேனை என்னும் உயரிய நாடகத்தை தமிழ்ப்பேசும் படக்காட்சியாக எடுக்க திருப்பூர் பேசும் படக்காட்சிக் கம்பனியார் முயற்சி செய்கின்றனர். பேசாத படக்காட்சியில் இந்நாடகம் ஸ்ரீமதி இனுக்ஷி ருமாராவ், ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத்யாய என்பவர்களால் மிகவும் சிறந்த முறையில் நடிக்கப்பட்டிருக்கிறது. திருப்பூர் கம்பனியார் எடுக்க முயற்சிக்கும் மிருச்சகடித் தமிழ்ப்படக் காட்சியில் பிரமஸ்ரீ V. A. செல்லப்பா ஐயர் கதாநாயகனாக நடிப்பர் என்று தெரிகிறது. பிரமஸ்ரீ செல்லப்பா ஐயர் கோவலன் 'திரௌபதை வஸ்திராபகரணம்,' "குலேபகாவலி," "ஹரிச்சந்திரா," "லலிதாங்கி," தர்மபத்தினி என்னும் காட்சிகளில் நடித்தவராவர் சங்கீத விஷயமாகச் சொல்லுமிடத்து ஸ்ரீமான் ஐயரைப்போலத் தெளிவாகவும் இனிமையாகவும், சுலபமாயும் பாடக்கூடியவர் படக்காட்சி புலகில் எவரும் இல்லையெனத் திடமாய்க் கூறலாம். ஆனல் அன்னவரின் நடிப்பில் சில சமையங்களில் கண்ணை மிரள விழிப்பதை அவர் தவிர்ப்பாரானல் பொன்மலர் நாற்றமுடைத்து என்பதற் கிலக்காவர்.

### மனோகரா.

சென்னை ரூவ் பகதூர் சம்பந்த முதலியார் அவர்களின் நாடகங்களில் "மனோகரனே" சிரேஷ்டம் பெற்றது. இந்நாடகத்தைப் பேசும் படக்காட்சியாய் எடுப்பதற்கு முயற்சிகள் யாவும் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் சில நாட்களில் படம், காட்சிக்குத் தயாராய் விடும் மனோகரனை நடிப்பதற்குத் திறமை வாய்ந்த ஒருவரைத் தெரிந்தெடுப்பதில் ஆரம்பத்தில் கஷ்டமேற்பட்டது. சோகம், சிருங்காரம், வீரம் என்னும் மூன்றையும் மனோகரனை நடிப்பவர் திறமையுடன் காட்டவேண்டும். ரூவ் பகதூர் சம்பந்த முதலியார், தென்னிந்தியப் பிரபல நடிகர் ஸ்ரீ P S வேல்நாயர், சசெலக்ஷியர் நாடகசபையைச் சேர்ந்த ஸ்ரீ சுப்பிரமணியம் என்பவர்கள் மாத்திரமே மனோகரனாக நடிக்கும் திறமை வாய்ந்தவர்களாகும் எனச் சொல்லப்பட்டது. இவர்கள் மூவரும் இப்போது வயது முதிர்ந்தவர்களாய் விட்டனர். எனவே தகுந்த நடிகரைத் தெரிவதில் கஷ்டம் ஏற்பட்டது. ஈற்றில், சென்னை உத்தியோகத்தர் நாடகசபையைச் சேர்ந்த ஸ்ரீ V. A. T. செல்லம் அவர்கள் மனோஹரனாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். ஸ்ரீமதிகள் K R. சாரதாம்பாள், K. T. ருக்குமணி என்பவர்களும் இதில் நடிக்கின்றனர். ரூவ்பகதூர் சம்பந்த முதலியார் அவர்களே இதில் புருஷோத்தமனாக நடிக்கின்றார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது

### கிருஷ்ணநாரதி.

நாரதரைப் பெண் உருவாக்கி ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அன்னவாமீது செய்யும் திருவிளையாடல்களைக் காட்டும் வேடிக்கை நிறைந்த சரிதம் இது. வட இந்தியக் கம்பனி ஒன்று பேசாத படக்காட்சியில் இச்சரித்தை எடுத்தவர்கள். இப்படம் இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற் காட்டப்பட்டது. இப்போது இதனை தமிழ்ப் பேசும் படமாக்க முயற்சிப்பவர்கள் சென்னை சுகதாசு கம்பனியார் ஆவர். இன்னும் சில வாரகாலத்தில் இப்படம் தயாராய்விடும்

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டவிச் சட்டத்தின்படி லைசென்சு பெற்ற அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் கொட்டடி மா. கு. தெண்டாயுதபாணி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

மார்கழிமாசம் 1934 ம் ஆண்டு

| நம். | உ. | ரூ. | ச. | பெயர். ஊர். நகைவிபரம். |
|---|---|---|---|---|
| J8114 | 19 | 10 | | சி ஐயம்பிள்ளை புங்குடுதீவு கல்தோடு 2 |
| 8130 | 20 | 28 | | உ. முகம்மது மிருசாய்வு சோனகதெரு இரண்டுபட்டு மணிக்கோர்வை 1 |
| 8231 | 25 | 14 | | இ. கந்தன் நயினாதீவு சிறுகாப்பு 2 |
| 8276 | 28 | 11 | | N. முகம்மது சோனகதெரு மணிக்கோர்வை 1 |
| 8322 | 30 | 30 | | இ. சண்முகபத்தர் கடையடி வயிரக்கல் மோதிரம் 1 |
| 1935 ம் ஆண்டு ஜனவரி மாசம் | | | | |
| 8389 | 2 | 50 | | செ. பிலேந்திரன் காவாந்துறை பூரான் அட்டியல் |
| 8391 | 2 | 14 | | M. K. முகைதீன் சோனகதெரு மணிக்கோர்வை 1 |
| 8428 | 3 | 15 | | வே. சின்னச்சி கொட்டடி கல்தோடு 2 |
| 8439 | 3 | 100 | 03 | M. M. முகைதீன் சோனகதெரு அரக்குடன் பொன் கடையம் 2 |
| 8456 | 5 | 12 | | வே. சின்னச்சி கொட்டடி மோதிரம் 2 |
| 8460 | 5 | 10 | | த. அந்தோனி காவாந்துறை குவளை கடுக்கன் 2 |
| 8469 | 5 | 7 | | மோ. வேலுப்பிள்ளை வேலணை கல்தோடு 2 |
| 8472 | 5 | 60 | | வே. அய்யாத்துரை புங்குடுதீவு மு அட்டியல் 1 |
| 8534 | 7 | 16 | | மீ. முகமது அபுபக்கர் சோனகதெரு அறுக்குத்தா 10 |
| 8535 | 7 | 40 | | ச. குமாரசாமி மட்டுவில் பூரான் அட்டியல் 1 |
| 8544 | 8 | 10 | | சி. சபாரெத்தினம் மண்டதீவு குவளைக்கடுக்கன் 2 |
| 8595 | 10 | 30 | | மு. மீருன் முகைதீன் சோனகதெரு தட்டுதாலி உருப்படி 18 |
| 8605 | 10 | 15 | | இ. தருமலிங்கம் றெயிலடி மோதிரம் 2 கல்தோடு 2 |
| 8608 | 10 | 45 | | ம. பெரியதம்பி சோனகதெரு காப்பு 2 நாலுபட்டுமணிக்கோர்வை 1 |
| 8619 | 11 | 10 | | கா. பொன்னையா புங்குடுதீவு கல்தோடு 2 |
| 8621 | 11 | 80 | | சி. சிவசம்பு கடையடி அச்சுக்காப்பு 2 |
| 8656 | 12 | 47 | | க. குட்டித்தம்பி அளவெட்டி பெண்டன்உடன் சங்கிலி 1 |
| 8664 | 12 | 185 | | செ. ஐய்யாத்துரை தட்டாதெரு பீலிக்காப்பு 2 மோதிரம் 4 கடு 3 |

விற்பனவு யுவ வருஷம் தை மீ 27 ந் திகதிக்குச் சரியான (9-2-36) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை பிறகேலாக மிகுதி மேற்படியாரிடத்தில்பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(Mis 261. 23&27-1-36)

சி ஐயம்பிள்ளை உடையார்
வேர்தின் மேன்தர்

## விளம்பரம்.

**யாழ்ப்பாணம் கலாசங்க வெளியீடு 1.**

**புதிய நாட்டுச் சீவன சாஸ்திரம் வெளிவந்துவிட்டது.** திருநெல்வேலிச் சைவவித்தியாசாலையிலும், பருத்தித்துறை மனோகரா பிறஸிலும், எல்லாப்புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 1-75 சதம்.

**யாழ்ப்பாணம் கலாசங்க வெளியீடு 2.**

**1937ம் ஆண்டு தமிழ் J. S. C வகுப்பிற்குரிய இலக்கியக் குறிப்புக்கள்.** திருநெல்வேலியிற் கற்பிக்கும் திறமையுள்ள ஆசிரியரொருவரால் எழுதப்பட்டு அச்சாகின்றன. விரைவில்வெளிவரும்.

Mis 254. 19-1-36 to 18-2-36.

## மருந்துச் சரக்குகளின் விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச்சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக்கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம்பர் கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—25 | 7—50 |
| ,, குங்குமப்பூ | —50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1- நம். காண்டாமிருகக் கொம்பு களஞ்சுஒன்றுக்கு சதம்—50
றுத்தல் ஒன்றுக்கு ரூபா 40

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்ல சரக்குகளே; எங்களிடம் நேரில் வந்து பார்த்துக்கொள்ளலாம் இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக்கற்பூரம், ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தனக்கட்டை, சந்தனவில்லை சாம்பிறாணி பதங்கம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர் வகைகளும், அபிஷேகத் திரவியங்களும் ஓமவாட்டர், சுருட்டுக் கோடாச் சரக்குவகைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திகளும், மற்றும் மருந்துச்சரக்கு வகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும், திருச்சி டக்டர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும், யாழ்ப்பாணம், டக்டர் ஜே வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்து வகைகளும் இவ்விடத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. மூலம் பெறவிரும்புவோர், நான்கிலொருபாகத்தை முன்பணமாக அனுப்ப வேண்டும். தொடுவாய்ப் பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மணிஆடர் அனுப்பும் விலாசம்,

**ஆ. இராசையா,**

சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச் சரக்குக் கடை

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

Q. 240 1-1-36 to 31-3-36.

# ஜாதிக்கட்டுப்பாடு அகல வேண்டும்.

## அப்போதுதான் அமெரிக்காவின் அநுதாபம் அமெரிக்க அறிஞரின் வியாக்கியானம்.

## அமெரிக்கர் சமத்துவம் பாராட்டுபவராம்!

அமெரிக்காவிற் பிரபல பத்திரிகாசிரியரான மிஸ்டர் ரூவ் ஹௌவார்ட் என்பவர் சென்ற வெள்ளிக்கிழமையன்று பம்பாய்க்கு விஜயம் செய்தார். அப்போது, அவர், இந்திய சுதந்திரக் கிளர்ச்சியில் அமெரிக்காவின் அநுதாபம் என்பது பற்றிப் பின்வருமாறு கூறினர்.

"இந்தியாவில் சாதிக்கட்டுப்பாடு இருக்கும்வரை, அமெரிக்கா இந்திய அரசியற் பிரச்சினைகளிற் கவனமுஞ் செலுத்தாது, பாரத மக்கள் பால் அநுதாபமும் கொள்ளாது; அமெரிக்கர் ஜனநாயகக் கொள்கையில் திளைக்கப்பெற்றவர். சமத்துவம் பாராட்டுபவர்; பிறப்பினுல் உயர்வு தாழ்வு இல்லை என்பவர்; அப்படிப்பட்டவர்கள், சாதிக் கட்டுப்பாடும், ஜாதி அகம்பாவமும் தாண்டவமாடும் பாரத நாட்டின் மீது இப்போது அநுதாபம் கொள்ள மாட்டார்கள்"

### ஐக்கியசங்கங்களின் தலைவர்.

இலங்கை ஐக்கிய சங்கங்களின் பதிவு காரியஸ்தராகிய மிஸ்டர் கால்வெட் அவர்கள் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பல ஐக்கிய சங்கங்களையும் பார்வையிட்ட பின் சென்ற 23-1-36 வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் யாழ்ப்பாணம் - மல்லாகம் புகையிலை வியாபார ஐக்கிய சங்கத்தைப் பார்வையிட்டனர். அச் சமையம் அச் சங்கத்தின் காரியாலயத்தில் சங்கத் தலைவரும் சங்க அதிகார சபை அங்கத்தினர்களும் குழுமியிருந்தனர். பதிவுகாரியஸ்தர் அவர்கள் சங்கத்தினரால் இதுவரை செய்யப்பட்ட வேலைகள் யாவும் திருப்திகரமாக இருப்பதாகப் பாராட்டினர். இன்னும் செய்ய வேண்டிய திருத்தங்கள் இவை யிவையெனவும் எடுத்துக் காட்டினர். பின் மல்லாகத்திலிருந்து சங்க ஏஜண்டரால் அனுப்பட்ட மேலைக் கச்சவடம் திரு பிரபு அவர்களுடன் நிர்வாகசபையினர் கலந்துரையாடியதும் 6 மணியளவில் கூட்டம் நிறைவெய்தியது.

### வித்தியா பகுதியார் கூட்டம்.

சென்ற வாரம் இலங்கை வித்தியா பகுதிக்குரிய வித்தியாதரிசிகள் பலர் ஒருங்கே கூடி இலங்கையில் தற்போது ஊட்டப்பட்டு வரும் கல்வியைச் சீர் திருத்தும் நோக்கமாகச் சில பிரேரணைகள் செய்யப் பட்டன.

# உதவி செய்ய முடியாது.

## அபிசீனியாவுக்குச் சர்வதேச சங்க உதவி. கறுப்பர்களின் ஓலம் அவலமாயது.

## பணமின்மையே காரணமாகும்.

சர்வதேச சங்கத்து விதிப்படி, தனக்கு இந்த ஆபத்தான நிலைமையில் பண உதவி செய்யும் படி அபிசீனியா சர்வதேச சங்கத்திற்கு மநுச் செய்தமை ஞாபகமிருக்கலாம்.

சென்ற வாரம் கூடிய சர்வதேச சங்கத்துப் பதின்மூவர்சபை இந்த மநுவைப்பற்றி ஆலோசித்தது. இப்போது சங்கத்திடம் பணம் இல்லை. ஆனபடியால் அபிசீனியாவுக்கு உதவி அளிக்க முடியாது. என்று அப்பதின் மூவர் சபை தீர்மானித்துவிட்டது.

### பிரிட்டிஷ் கைத்தொழிற் காட்சி.

அடுத்த மாதம் லண்டனிலும், பர்மிங்காமிலும் பிரிட்டிஷ்கைத்தொழிற் காட்சி நடைபெறும். லண்டன் காட்சி சுமார் 12 மைலும், பர்மிங்காமிலுள்ள காட்சிச்சாலை சுமார் 11 மைலும் விஸ்தாரமுள்ளதாக இருக்கும்; இக்காட்சிக்கு 64 தேச மக்கள் விஜயம் செய்வரென எதிர் பார்க்கப்படுகிறது. அவர்களுள் ஹாலந்திலிருந்து கூடுதலானவர்களும் அதற்கடுத்தாற்போல ஜெர்மனியிலிருந்தும் மூன்றாவதாகப் பெல்ஜியத்திலிருந்தும் சனங்கள் வருவார்களென்று சம்பப் படுகிறது

### அபாயகரமான மோட்டர் விபத்து.

சென்ற வியாழக்கிழமையன்று காசி செல்லையா என்னும் சாரதி தனது மோட்டர்க் காரில் நால்வரை ஏற்றிக் கொண்டு புன்னாலைக் கட்டுவனில் இருந்து புறப்பட்டான் என்றும், புத்தூரில் காசி வைரமுத்து என்னும் தன் சகோதரனைக் கண்டு அவனையும் ஏற்றிக் கொண்டு புத்தூர் கள்ளுத் தவறணையில் மதுபானம் செய்து விட்டு அச்சுவேலிக்குப் போய்ப் பின் மீண்டு வரும் வழியில் ஓர் கற்பாறையுடன் தன் காரை மோதினன் என்றும் அதன் பயனாக உள்ளேயிருந்த காசி வைரமுத்து கீழே வீசியெறியப்பட்டு மரணமடைந்தான் என்றும் அறிகிறேம்.

சாரதியான காசி செல்லையா சிறையாக்கப்பட்டான். விசாரணை பெப்ரவரி மாதம் 4-ம் தேதிக்கெனத் தவணையிடப்பட்டிருக்கிறது.

### மின்சார வெளிச்சம் கொடுக்கும் மீன்.

அமெரிக்கா மீன் காட்சிச் சாலையில் புதிதாக ஆறு அடி நீளமுள்ள விலாங்கு மீன் ஒன்றைக் கொண்டு வந்து வைத்திருக்கின்றனர். அதினின்றும் மின்சார சக்தியுண்டாகிறது. அதை வைத்துள்ள பெரிய குளங்களில் இரண்டு அலுமீனியக் கம்பிகளைத் தொடுத்து அவற்றின் மூலமாக மின்சார விளக்குகளை ஏற்றி வருகிறார்கள் - அம் மீன் அசைய ஆரம்பிக்க அச்சக்தி உண்டாகிறது. அதற்கு 125 அல்லது 200 வரைக்கும் "வோல்டேஜ்" இருக்கிறதென்று கண்டு பிடிக்கப்பட்டது. ஒரு தினத்திற்கு மும்முறை மேற்படி மீனினின்றும் அச்சக்தியை எடுத்து வருகின்றார்கள்.

## கடிதம்

### கந்தர்மடம் வித்தியாசாலை.

ஸ்ரீ கா. அருளபலம்
அவர்கட்கு
ஐயா,

சென்றவியாழக்கிழமை (23-1-36) வெளிவந்த இந்துசாதனப் பத்திரிகையில் கந்தர்மடம் வித்தியாசாலை என்ற மகுடமாயத்துடன் - சொந்தக்காரர் மானேஜர் பிணக்கும் மானேஜரின் விளக்கமும் என்னும் முகவுரையுடன்வரைந்த சில நியாயங்களை யான் வாசித்தேன். அதில்,

1. அவர் வித்தியாசாலையிற் படிப்பித்த சில ஆசிரியர்களை விலக்கும்படி கிருப்பினர் என்கிறீர். சென்ற ஆனிமாசம் முதல் இதுவரையிலும் நோருசியிலுமுள்ள எந்த ஆசிரியரை யான் விலக்கும்படி கேட்டேன்.
2. அவருக்கும் எனக்கும் அபிப்பிராய பேதம் இருந்தது என்கிறீர். இரண்டுபேருடைய அபிப்பிராயத்தையும் யாவரும் அறியத் தெரிவியும்
3. வேற்றுமை காட்டவும் விருப்பமில்லை என்கிறீர். வேற்றுமை காட்டாமலா உம்முடைய 17-12-35 க் கடிதப்படி வித்தியாலை பதிவினின்றும் நீக்கப்பட்டது?
4. வித்தியாசாலை விஷயமாக வித்தியாசர்த்தருக்கும் பிரதமவித்தியாதரிசிக்கும் அநேக கடிதங்கள் எழுத சேர்ந்தது என்கிறீர். அக் காகிதங்களைத் தயை கூர்ந்து இப் பத்திரிகையிற் பிரசுரஞ் செய்யும். அப்போது உம்முடைய உள்ளக் கிடக்கை சகலருக்கும் விளங்கும்.
5. அவர் சம்மதத்தை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்கும்படியும் அப்படி அறிவிக்கும் பட்சத்தில் நான் வித்தியாசாலையைப் பலவிதமாகவும் முன்னேற்றத் திற்குக் கொண்டுவர முயற்சிப்பேன் என்கிறீர் தயவு செய்து அக்கடிதத்தை இப்பத்திரிகையிற் பிரசுரஞ் செய்யும்.
6. இப்பொழுது இவ் வித்தியாசாலை இருக்கும் நிலையம் சுகாதாரத்துக்குரிய நிலையமல்லவென்று வித்தியாசாலை வைத்தியப் பரிசோதகர் குறித்திருக்கிறார் என்றீர். அவர் குறித்த திகதி உம்முடைய காலத்திலா? அல்லது அதற்கு முன்னா? அதற்கு முன்னுனல் வடபகுதி பிரதம வித்தியாதரிசி எனக்குத் தெரிவிக்கவில்லையே? அப்படியானுல் வித்தியாசாலையை வேறு இடத்திற்கு மாற்றிக்கொள்வேனே
7. இவருடைய மாதிரியும் என்னுடைய மாதிரியும் ஒத்துவரவில்லை என்கிறீர். இரண்டு பேருடைய மாதிரிகளையும் விபரமாகச் சொல்லும்.
8. அவர்களுக்கு மாறாக என்னுடைய அதிகாரத்துக்கு அதிகாரத்தைச் செலுத்த நான் விரும்பவில்லை என்கிறீர். 17 – 12 – 35 பிரதம வித்தியாதரிசிக்கு எழுதிய காகிதத்தை இப் பத்திரிகையிற் பிரசுரஞ் செய்யும். அப்பொழுது நீர் செலுத்தினது செலுத்தாதது உலகிற்கு விளங்கும்.
9. சகோதர அன்பு பேசுகின்றீர். அதன் நிமித்தமாகவா கோருசியிலும் நினைவாவு இடாப்பிலும் முன் நாலு மாதமில்லாத ஆசிரியர் ஒருவருக்கு உம்முடைய சிநேகிதர் ஒருவரின் வேண்டுகோளின்படி ஐப்பசி, கார்த்திகை, மார்கழி சம்பளத்திற்கு Requistion papers கையெழுத்திட்டுச்சம்பளம் பெறச் செய்தீர். அதன் நிமித்தமாகத்தான் வித்தியாசாலை பதிவினின்றும் விலக்கப் பட்டது என்று சிலர் பேசிக் கொள்கிருர்கள். அதன் மெய் பொய்யை விபரமாகச் சொல்லும்.
10. ஓர் இடத்தில் கந்தர்மடவாசிகளோ எனவும் விளித்தீர். அதில் என்னையும் சேர்த்தா? அல்லது தவிர்த்தா?
11. நீர் வித்தியாசாலையில் இல்லாத ஒரு ஆசிரியருக்குச் சம்பளம் பெற்றுக் கொடுத்தமையினைப்பற்றி பிரதமவித்தியாதரிசியையக்கேட்கவில்லையா? அதற்கு நீர் எழுதின நியாயத்தை இப் பத்திரிகைவாயிலாகச் சகலரும் அறியும்படி பிரசுரஞ் செய்யும்.
12. நீவிர் ஓர் "அட்வோக்கேற்" என நினைந்து இந்து சாதனப் பத்திராதிபர் ஆங்கிலப் பத்திரிகையில் நியாயங் கேட்கத் தமிழ்ப் பத்திரிகையில் ஏன் கைவைத்தீர்? ஆங்கிலத்தில் எழுதினுல் பிரதம வித்தியாதரிசி இரண்டு பேருடைய நியாயங்களையும் சீர்தூக்கிக் கந்தர்மடவாசிகட்கும் சைவவித்தியா விருத்திச் சங்கத்தினருக்கும் பணச் செலவில்லாமல் இந்த வித்தியாசாலையைத் திரும்ப ஏற்றுப் பதிவு செய்வாரோ என்ற பயங்காணமோ!
13. உத்தியோகத்தரும் தற்பிரியானமுள்ள பிரபுக்களும் உலகினுக்குச் செய்யும் அநீதிகளைக் கண்டிக்க ஓர் பத்திரிகை வேணும் வேணும் என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பிரசங்கங்கள் தோறும் கூறியபடி அவர்களது சகதியாராலும் பொதுநன்மைவிரும்பிய பிரபுக்களாலும் ஆக்கப்பட்ட இந்துசாதனப்பத்திரிகையில் இருவரும் அகப்பட்டுக் கொண்டோம். நீர் வித்தியாதரிசிக்கும் பிரதம வித்தியாதரிசிக்கும் எழுதிய கடிதங்களை இப் பத்திரிகை வாயிலாகப் பிரசுரஞ் செய்யும் நானும் பிரசுரஞ் செய்கிறேன். அப்போது யார் தன்மையை உலகம் அறியுமென்று பார்த்துக் கொள்வோம்.

இங்ஙனம்,
தாழ்மையுள்ள,
R. M. வேலுப்பிள்ளை.

24-1-36.

# சமையற்காரனின் சதிமோசம்?

## மனைவியை அடித்த இந்தியக்கூலி புத்திமதிகூறிய தமிழ் வைத்தியர்.

## சந்தேகிக்காத எதிரிமீது பிராது விசாரணை முடிவில் விடுதலை

சுண்டிக்குளியில்வசிக்கும் ஆயுள்வேதவைத்தியரான வேலுப்பிள்ளை அப்பாத்துரை என்பவர் புதிதாகக் கட்டிய வீட்டுக்கு நெருப்புவைத்தான் என சுப்பையா என்னும் இந்தியக் கூலிக்காரன் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் சென்ற வியாழக்கிழமை குற்றஞ் சாட்டப்பட்டான்

### வழக்காளி முறைப்பாடு.

விசாரணையின்போது வழக்காளியான அப்பாத்துரை பின்வருமாறு முறையிட்டு செய்தார்:—

"எதிரி ஓர் இந்தியன்; இவன் சுண்டிக்குளியில் அநேக வீடுகளில் சமையற்காரனுகவிருந்தான். இற்றைக்கு 6 மாதகாலத்தின் முன்னர் இவன் எனது அயல்வீட்டிற் சமையற்காரனுயிருந்தான். இச்சம்பவம் நடக்க 5, 6, தினங்களுக்குமுன் அவன் தனது மனைவியை அடிப்பதைக் கண்டு அப்படி அடிக்கவொண்ணுதெனப் புத்திமதி கூறியிருக்கிறேன்.

"இச்சம்பவம் நடக்கச் சிலநாட்களுக்குமுன் எனது வீட்டை விட்டுப்போய்விட்டான். பின்னர், என்னிடம் வந்தான் "போன நீ பின் ஏன் வந்தாய்; இங்கு வாராமற் போனதே நல்லது" என்று நான் கூறினேன்

### காணவில்லை.

"இவன் என் வீட்டுக்கு நெருப்புவைத்ததனையை நான் காணவில்லை. அந்தநேரத்தில் நான் வீட்டில் இல்லை. நான் வீட்டிற்குவந்தபோது நெருப்பு அவிக்கப்பட்டுவிட்டது வீட்டில் அதிகசேதம் ஏற்படவில்லை 25 கிடுகுகள் மாத்திரமே எரிக்கப்பட்டுக் கிடந்தன. வீடு எரிந்ததைப் பற்றி செல்லத்துரை, இராஜேந்திரம் என்பவர்கள்தான் காற்சந்தியில் எனக்கு அறிவித்தவர்கள். அவர்களும் இவன் நெருப்பு வைத்ததைத் தாம் கண்டதாகச் சொல்லவில்லை. யாரோ நெருப்பு வைத்துவிட்டார்கள் என்று நான் நான் விதானைக்கும் அறிவித்தேன் எதிரியை நான் சந்தேகிக்கவில்லை."

### எதிரி நிரபராதி

கணபதிப்பிள்ளை என்பவரின் சாட்சியத்தின் பின் நீதிபதி எதிரியைச் சுத்தவாளியெனக் கண்டு அவனை விடுதலை செய்தார் [ ஸ. நி. ]

# யாழ்ப்பாணம் நகரசங்கம்.

## சக்கிடுத்தார் நியமனம்.

—:o:—

## ஸ்ரீ பாலசுப்பிரமணியம் தேரிவு செய்யப்பட்டார்.

(நமது நிருபர்.)

சென்ற வெள்ளிக்கிழமைமாலையின் நேரம் யாழ்ப்பாணம் நகரசங்கத்தின்கூட்டம் ஒன்று கூடியது. இக்கூட்டத்திலேயே புதிய சக்கிடுத்தார் நியமனம் செய்யப்படுவார் என்ற செய்தி பரவியதால் பன்னூற்றுக்கணக்கானவர்கள் கூட்டத்திற்குச் சமுகம் அளித்தனர்.

சக்கிடுத்தார் பதவிக்கு மனுச் செய்தாவர்களில் பிறக்ரா ஸ்ரீ M. S. பாலசுப்பிரமணியம ஸ்ரீ S. தங்கராஜா என்பவர்களது மனுக்கள் மாத்திரமே ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. ஈற்றில் ஸ்ரீ பாலசுப்பிரமணியம் அவர்களே சக்கிடுத்தார் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

### தபாற் கந்தோர்.

நாளைத்தினம் மன்னர் பிரானது தேகம் சேமிக்கப்படுவதையிட்டு அரசாங்க நிலயங்கள் யாவும் மூடப்படும் வண்ணுர்பண்ணைத் தபாற் கந்தோரில் எவ்வகையான கருமமும் நடைபெருது யாழ்ப்பாணம் தபாற்கந்தோரில, ஞாயிற்றுக்கிழமைகளிற் போல வேலை நடைபெறும்.

### ஆடு இறக்குமதி.

போன வாரம் வெளியான செஜற் பத்திரிகை அறிக்கையின்மேல் மற்ற மாதம் முதலாந் தேதியிலிருந்து மாதமொன்றுக்கு 2500 ஆடுகள் தான இலங்கையில் இறக்குமதியாகவேண்டுமென்று கட்டுப்படுத்தப் படுகிறது.

## விசேஷவிஞ்ஞாபனம்.

நாளைத்தினம் (28 - 1 - 36) நமதுபழைய அரசசக்கரவர்த்தியின் பிரேத அடக்கத்திற்கென நியமிக்கப்பட்ட விடுதலைநாளானதால் அத்தினத்தும் இந்துசாதனாலயம் சைவப்பிரகாசயந்திரசாலை யென்னும்இவைகளில் எக்கருமமும் நடைபெரு.

—மனேஜர்

## தேவை.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலைக்குப் பயிற்றப்பட்ட ஓர் ஆசிரியை தேவை விருப்பமானவர்கள் மேற்படி பாடசாலை மனேஜருக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம்.

மானேஜர்,
இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை,
யாழ்ப்பாணம்.

22-1-36.
(Mis 262. 23&27-1-36)



*வாழ்க அந்தணர் வானவ ரானினம்*
*வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக*
*ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே*
*சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.*

## இந்துசாதனம்.

**யாழ்ப்பாணம்: யுவஹூ தைமீ கஉ திங்கட்கிழமை.**

## சர்வதேச சங்கத்தின் பேடித்தனம்.

அபிஸீனியர் விஷயத்தில் முஸோலினி செய்துவரும் அக்கிரமமோ, உங்களுக்குத் துணை புரிவோம் நீதிசெய்வோம் இத்தலியரைத் தடுப்போம் என்று சொல்லி அந்த அபிஸீனியரை வஞ்சித்துவரும் சர்வதேச மகாநாட்டின் அக்கிரமமோ கொடியதென்பதை அறியமுடியாமலிருக்கின்றது. "அரவுயர்த்தோன் கொடுமையிலும், முரசுயர்த்தோய் உனதருளுக் கஞ்சினேமே" யென்று வீமன் தருமருக்குச் சொல்லியவாறு, அபிசீனியச் சக்கரவர்த்தி இந்தச் சர்வதேசசங்கத்தார்க்கு முறையிடவேண்டியிருக்கின்றது. மேலும் முஸோலினிதான் பகைவனென்றும், தன்னேக்கம் அபிசீனியரை வென்று அவர் நாட்டைத் தனது ஆதிக்கத்துள் ஆக்கவேண்டுமென்பதே யென்றும், வெளிப்படையாகத் தெரிவித்து யுத்தஞ் செய்தாலாவும், சர்வதேசசங்கத்தவர் அபிஸீனியாவுக்கு உதவி செய்கிறோமென்று சொல்லிச் சொல்லித் தவணையிட்டு இத்தலி அபிஸீனியாவை அடிக்கவிட்டுப் பார்த்துக்கொண்டிருத்தலினலும் சர்வதேசசங்கத்தாரின் நச்சுப்பகையைக்காட்டிலும் முஸோலினியின் வெளிப்படையான பகை உத்தமமானதாகும்.

எண்ணெயை இத்தலிய நாட்டிற்கு ஏனைய நாடுகள் அனுப்பாது சர்வதேசசங்கத்தார் தடுத்துவிட்டால், இத்தலியை முட்டுப்படுத்தி யுத்தத்தை விடச்செய்யலாமென்பதுதான் ஆரம்பத்திலே சர்வதேசசங்கத்தார் செய்துகொண்ட உபாயமாகும். சங்கத்தார் எண்ணெயை இத்தலிக்கு அனுப்பாது தடுபபரென்ற விஷயத்தில் முஸோலினிக்கும் பயமுண்டு; அப்படித் தடுப்பரேல் அவர்களோடு போர்க்கறைகூவ ஆயத்தந்தான் என்று முசோலினி தெரிவித்திருப்பதும் மெய். இப்படி எண்ணெயேற்றுமதியை இத்தலி விஷயத்தில் தடுப்பதனுற் பயனுண்டோ என்பதை விட்டு யோசித்தற்கான ஒரு கூட்டம் பல மாசங்களாக ஏற்பட்டுளது; அக்கூட்டத்தாரின் அறிக்கை முற்றுறை அபிஸீனியரும் இத்தலியரும் எல்லாரும் மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனல் குறித்த அறிக்கை முற்று இப்போதைக்கு முற்றுகுமெனக் காத்திருத்தல் முடியாது போலும். இப்போதைக்கு மாத்திரமன்று, இத்தலிய—அபிஸீனிய யுத்தந்தான் முடிவுக்குவரினும் அந்தக் கூட்டத்தவரின் முற்றுமுடிவுக்கு வருமென்று சொல்லத் திடமில்லையே!

ஏனென்றல் 18 பேரைக்கொண்ட அக்கூட்டத்தார் இவ்வளவு காலமுந் தாங்கள் யோசித்துவிட்டு, இப்பொழுது அது தங்களால் முடியாதென்றும் எண்ணெய் விவகார நிபுணர் யோசித்து அதனைப்பற்றிய அறிக்கையை வெளியிடல்வேண்டுமென்று நிர்ணயஞ்செய்து, தம் கூட்டத்திற்கும் நீடித்த தவணையிட்டிருக்கிறார்கள். இவர்கள் இப்படிச் செய்திருப்பதற்குக் காரணம் சர்வதேச மகாநாட்டிற் சேராத இராச்சியங்கள் இத்தலிக்கு எண்ணெய் அனுப்புதல் கூடுமோ என்னுஞ் சந்தேகமேயாகும். இப்படியான நாடுகளுள் கனடாதேசமும் ஒன்றாகும். ஆனல் கனடா தேசத்து அரசினர், சர்வதேச சங்கத்திற் சம்பந்தப்படாத நாட்டினர் பலரும் இத்தலிக்கு எண்ணெய் அனுப்பாதொழிவரேல் தாமும் அனுப்பப்போவதில்லையென நிர்ணயஞ் செய்துள்ளனர். இந்த விஷயத்திலே சர்வதேச சங்கத்தினரே, தம்மோடு சேராத நாடுகளின் அரசினரோடு இத்தலிக்கு எண்ணெ யனுப்ப வொண்ணுதென ஒழுங்குசெய்யவேண்டியது ஆவசியகமாகும். சேராத நாட்டினர் அதற்கு உடன்படாமல் இத்தலிக்கு எண்ணெய் உதவினுலும் எண்ணெய் முட்டு நேருமென்பதே பல நிபுணர்கள்கொண்டுள்ள எண்ணம். காரணமென்னையெனின், உலகத்திலே, இச் சர்வதேச சங்கத்திற் சம்பந்தப்பட்ட பிருத்தானியரும் ஒல்லாந்தரும் நோர்வேயினருமே பெருந் தொகையான எண்ணெய்க்கு அதிகாரிகளென்பதாம் இம்மூன்று பகுதியாருள் ஒருவரும் இற்றலியருக்கு எண்ணெய் உதவாதொழிவரேல் அவர்கட்கு எண்ணெய் முட்டுப்பாடு வருவது நிசமென அறிஞர்கள் கூறுகின்றனர், மேலும் இச்சங்கத்தினர் ஏனைய தேசத்தினரைப்பற்றிச் சிந்தியாது, முதல் தங்கள் கடமையை அன்றே தாங்கள் செய்யவேண்டியது? இச் சங்கத்தினருக்கு முஸோலினியுடன் மாறுபடுதற்குப்பயம் ஒருபுறம், எண்ணெய் வியாபாரத்தைக் கைவிட வொண்ணுதென்ற பேராசை இன்னெருபுறம், அபிஸீனியருக்கு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கம் மற்றேருபுறம், யுத்தத்திலே சேர்ந்தால் ஆள் நஷ்டம் பொருள் நஷ்டம் தோல்வியென்னு மிவைகள் வந்து சேருமோ என்றசந்தேகம் வேறேருபுறம், முசோலினியைத் தலையெடுக்காவிட்டால் தங்களெல்லோர்க்கும் ஆபத்தென்ற ஏக்கம் பிறிதொரு புறம் ஆகவெல்லாம் ஒரு முகம் என்றமாதிரி வெள்ளையர் கறுத்தவரைப் பொருட்டு வெள்ளையனேடு மாறுபடலாமோ என்ற அபிமானம் ஒழிந்த ஒருபுறமாக, இப்படிப்பட்டவர்கள நீதி செய்வார்களெனக்காத்திருக்கலாமா?

### நமது புதிய அரசர்.

*பிரிட்டிஷ் அரசியலில் அரசர் பதவி காலியாகவிருப்பது இல்லை என்ற சம்பிரதாயத்தை முன்னிட்டு ஜோர்ஜ் மன்னர் இறந்தவுடனேயே அவரது மூத்த குமாரராய வேல்ஸ் இளவரசர் எட்டாவது எட்வர்ட்டு என்னும் பெயருடன் இராஜ்யாதிகாரத்தை ஏற்றுக்கொண்டு விட்டார்.*

*பிரிட்டிஷ் அரசியற்றிட்டத்தின்படி மணிமுடி தரித்து தேசத்தைப் பரிபாலிக்கும் மன்னர்க்கு அரசியலில் அதிகாரம் இல்லை என்பதே அரசியல் நிபுணரது அபிப்பிராயம்; எனினும் நெருக்கடியான நிலைமைகளைச் சமாளிப்பதில் மன்னரானவர் தமது செல்வாக்கை உபயோகித்து அவற்றைச் சரிப்படுத்த இடம் இருக்கிறது.*

*ஜோர்ஜ்சக்கரவர்த்தி இராஜ்யாதிகாரத்தைக் கையேற்ற காலத்தில் இருந்ததைவிட மிகவும் கஷ்டமான நிலைகளும், நெருக்கடியான பிரச்சினைகளும், எட்வர்ட் மன்னர் காலத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இற்றலிய அபிஸீனிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உலகத்தில் ஓர் கொடிய மகாயுத்தம் ஏற்படுதற்கான உற்பாதங்கள் தோன்றியிருக்கின்றன. பிரான்ஸில் நாணயமாற்றுச் சம்பந்தமாக நெருக்கடியான நிலைமை ஏற்பட, இற்றலிய அபிஸீனிய நாடகத்தில் முக்கிய நடிகராய் விளங்கிய பிரான்சியப் பிரதமமந்திரி இராஜினமாச் செய்துவிட்டார். எகிப்திலே இதுகாறும் ஆதிக்கம் வகித்துவந்த நெஸிம் பாஷா மந்திரிசபையினர் விலகிவிடத் தேசியக் கட்சித்தலைவரான நகஸ் பாஷாவுக்கு மந்திரிசபையை அமைக்கும் பொறுப்பு விடப்பட்டிருக்கிறது. அவர் மந்திரிசபையை தற்போதைய நிபந்தனைப்படி அமைக்க இணங்கவில்லை எனச் செய்திகள் கூறுகின்றன. இன்னும் அந்த நாட்டிலே தேசியக் கட்சியாரின் கோரிக்கைப் படி பழைய அரசியற்றிட்டம் வழங்கிக் கூடிய அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்து, ஓர் யுத்தத்திற் பங்குபற்றவேண்டி வந்தால், எகிப்தில் அமைதி யுண்டாக்கவேண்டியதே அதன் முதற் கடமையாகும்.*

*சீன - ஜப்பானியப் பிணக்குஇன்னும் ஒழிந்தபாடில்லை. ருஷியா தனது யுத்த தளவாடங்களைப் பெருக்கிக் கொண்டு போகிறது. கப்பற்படை மகாநாட்டில் இருந்து ஜப்பான் விலகித் தனது கடற்படையைப் பெலப்படுத்தக் கங்கணங் கட்டியிருக்கிறது.*

*சுதந்திரம் பெருத இந்தியா போன்ற நாடுகளில் சுதந்திர வேட்கை அதிகரித்திருக்கிறது. பாரத நாட்டில் ஓர்புதிய அரசியற்றிட்டம் புகுத்தப்பட விருக்கிறது.*

*இந்தப் பிரச்சினைகளில் எமது புதிய மன்னர் அதிக கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகின்றது. காலம் சென்ற சக்ரவர்த்தி காட்டிப்போயிருக்கும் வழியைப் பின்பற்றி, தமது பிரயாணங்களின் அநுபவத்தைக் கொண்டு, இப் பிரச்சினைகளைத் திருப்திகரமாகச் சமாளித்து, உலக மக்களின் ஆசீர்வாதத்தைப்பெற எமது மன்னர் பெருமானுக்கு எல்லாம்வல்ல பெருமான் இன்னருள் பாலிப்பாராக.*

## கண்ணோட்டம்.

### நகரசங்க சக்கிடுத்தார்

*இதுகாறும் காலியாய் இருந்த சக்கிடுத்தார்ப் பதவி நிரப்பப்பட்டது. இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீ பாலசுப்பிரமணியம் அவர்களை நாம் பாராட்டுகின்றேம். ஆனல் அன்னவர்க்கு நாம கூறக் கூடியது ஒன்றுண்டு நம் யாழ்ப்பாண நகரசங்கத்து அலுவல்கள் திருப்திகரமாயில்லை என்பதே இதுகாறும் ஊரவர்களும் அரசினரும் கொண்டிருக்கும் அபிப்பிராயமாகும் இந்த அபிப்பிராயத்தை மாற்றி சங்கத்தின் மீது ஊரவர்க்கு நம்பிக்கையைக் கொண்டுவருதற்கான முயற்சிகளைச் செய்வது சங்கநிர்வாகத்தின் தலைவராய சக்கிடுத்தாரின் கடமையாகும்; நேர்மை, பொறுமை, கடமையைச் செய்வதில் ஆர்வம், பரோபகார வாஞ்சை என்னும் சுகுணங்கள் அமையப்பட்டவர் என ஏற்கெனவே புகழப்பட்டு வருபவரான புதிய சக்கிடுத்தார் அவர்கள் இக் கடமையைத் திருப்தியுடன் நிறைவேற்றுவார் என்பதே எமது திடமான நம்பிக்கையாகும்.*

### அமெரிக்கர் அநுதாபம்.

*பிறப்பினல் உயர்வுதாழ்வு இல்லை என்னும் ஹிந்துமதக் கொள்கையையே நாம் அடிப்படையாகக் கொண்டுள்ளேம் ஆனல் இப்போது பம்பாயில் நிற்கும் அமெரிக்க ஆசிரியரான மிஸ்டர் ஹௌவாட் என்பவர் பாரதமக்கள் சாதிக்கட்டுப்பாட்டினை கொள்ளும்வரையில் இந்தியமக்கள்மீது அமெரிக்கர் அநுதாபம் கொள்ள முடியாது என்று பலபட விரித்துரைத்தார் தனக்கையே தனக்குதவியன்றி வெள்ளையர் தாபத்தினல் தமக்கு ஒருபயனும் கிடைக்கப்போவது இல்லை என்பதைப் பாரதமக்கள் அபிசீனியர் சீனர், ஜப்பானியர், முதலாம் நிற ஜாதியார் அப்போது கண்டுவிட்டனர்.*

*எனவே மேற்படி அமெரிக்க துரையின் வியாக்கியானத்தையிட்டு நாம் ஆச்சரியப்படத்தேவையில்லை. நேர்மாருக அது ஓர் பணிக்காலக் கூற்று என்று நாம்கொள்ளுவேம். ஆனல் மேற்படி ஆசிரியர் அமெரிக்கர் சமத்துவக் கொள்கையுடையவர், ஜனநாயகக் கொள்கையில் திளைக்கப்பெற்றவர் என்பதைநாம ஆட்சேபிக்காமல் இருக்கமுடியாது. அமெரிக்காவில்உள்ள நீக்ரோவர், செவ்விந்தியர் என்வர்க்கு இந்த ஒட்டவந்த பிடார் னேய அமெரிக்கர் செய்துவரா நிற்கும் அட்டூழியங்களை உலகம் அறியாமல் இல்லை என்பதைமட்டும் இச் சமத்துவப்பல்லவி பாடும் மேற்படி துரைக்குஅறிவிக்க விரும்புகின்றேம்.*

## சிசுவைக் கொன்ற பாதகன்.

### தனக்குப் பிறக்காமையினல் கொலை. ஒருமாசச் சிசுவுக்கு நச்சுத்திராவகம்.

### கண்டிச் சுப்பிறீம்கோட்டில் மரணதண்டனை.

(நமது சொந்த நிருபர்)

கேகாலைப் பகுதித் தோட்டம் ஒன்றில் வேலை செய்த தீபானிஸ் ஜெயசேகரா என்பவன், பிறந்து 1 மாதம் சென்ற பெண் சிசுவின் வாய்க்குள் நச்சுத்திராவகத்தை ஊற்றிக் கொலை செய்தான் என்ற குற்றத்தின் பேரில் கண்டிச் சுப்பிறீம் கோட்டில் சென்ற வெள்ளிக்கிழமை மரணதண்டனை விதிக்கப்பட்டான்.

எதிரி, பேபிநோனு என்பவளை விவாகம் செய்திருந்தான். விவாகம் செய்த சில நாட்களின் பின் பேபிநோனு அவனை விட்டு எங்கோபோய் பல மாதம் கழித்துக் கர்ப்பவதியாய் மீண்டும் தன் புருஷனிடம் வந்து, ஓர் பிள்ளையைப் பெற்று அதனைப் பதிவு செய்யும்படி அவனைக் கேட்டாள். தனக்கு அச் சிசு பிறக்கவில்லை யானமையால் பதிவு செய்ய முடியாது என்று தீபானிஸ் ஜெயசேகரா பதில் இறுத்தான்.

இதன்பின், ஒரு நாள் அந்தச் சிசுவை தன் புருஷனிடம் விடுத்து, பேபிநோனு ஸ்நானம் செய்யப் போனள். அப்போது ஜெயசேகரா, அதன் வாய்க்குள் நச்சுத்திராவகத்தை ஊற்றி அச் சிசுவைக் கொலை செய்தான் என்று வழக்கை நடாத்திய முடிக்குரிய நியாயவாதி கூறினர்.

### மதுப்பகுதிக் காரியாலயம்.

**யாழ்ப்பாணப் மதுப் பகுதி உத்தியோகத்தரான ஸ்ரீ V நாகலிங்கம் அவர்கள் ஜனவரி மீ 24-ம் தேதி தொடக்கம் பெப்ரவரி மீ 6-ம் தேதி வரை மதுப்பகுதித் தலைவராகக் கடமை பார்ப்பார்.**

## குளத்திற் குழந்தை!

பரவைக்குளத்தில் மிதந்தது.

### பொலிசார் விசாரணை.

*திருநெல்வேலியி லுள்ள பரவைக் குளத்தில் மிகவும் உருச் சிதைந்த நிலைமையில் ஒரு பச்சைப்பசுங்குழந்தை நேற்றுக்காலை (26-1-36) கண்டு அதிகாரிகளால் எடுத்துச் சோதிக்கப் பட்டதாம். இந்த அநியாயத்தைச் செய்த பாதகத்தி யார் என்பதைப் பொலிசார் விசாரணை செய்கின்றுர்கள்.*

### கால நிலை.

*மழைக்கோலம் இடை யிடையே காணப்படுவதன்றி இன்னமும் மழை பெய்தபாடில்லை, இச் சமயத்தில் ஒரு மழைபெய்யுமானல் நெற்பயிருக்கு அது பொன்மழையாகும்.*

### குயினயின் மருந்து.

*விவசாயப்பகுதியார்கடந்தமூன்று வருடகாலமாகச் செய்து வந்த பரீட்சார்த்த வேலைகளின் பயனுக இப்போது இலங்கைக்கு வேண்டிய குயினயின் மருந்தை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் குயினயின் செடிகளை ஏராளமாகப் பயிரிட அரசினர் முயற்சிக்கின்றனர்.*

### எஞ்சினீயரின் தெரிவு.

*நீர்ப்பாய்ச்சல் எஞ்சினியர் வேலைக்குப் பயிற்சியளிப்பதற்காய்ப் போதனுமுறைப் பள்ளிக்கூடம் ஒன்றை நீர்ப்பாய்ச்சப் பகுதியார் கொழும்பிலே திறவியிருக்கிறர்கள். இருபத்தாறு பேர்கள் இவ்வருடம் எஞ்சினியரின் முறைகளைப் பயிற்றுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.*

### பிரான்சிய மந்திரசபை வீழ்ச்சி.

*பிரான்சிய நாணய மாற்று நெருக்கடி சம்பந்தமாக, பிரான்சிய மந்திர சபை கலைக்கப்பட்டு புதிய மந்திர சபை அமைக்கப்பட்டிருக்கிறது. பிரதம மந்திரி ஸரட் என்பவர். அந்நியநாட்டு மந்திரி பிளாண்டின் என்பவர்.*

### ஸ்ரீஜுத் சுபாஷ் சந்திரபோஸ்

*காலம் சென்ற ஸ்ரீஜுத் V J. படேலினுல் டப்ளினில் அமைக்கப்பட்ட இந்தியா—ஐரிஷ் சங்கத்தை புநருத்தாரணம் செய்யும் பொருட்டு ஸ்ரீஜுத் சந்திரபோஸ் ஐயர்லாந்திற்குப் பிரயாணமாயிருக்கிறர்.*

### தேகவியோகம்

*ஸ்ரீமதி. சி. தங்கமுத்து*

நீர்வேலி R. சிதம்பரப்பிள்ளை யவர்களின் பத்தினியும் இலங்கைப் புகைரதப் பகுதியில் உத்தியோகமாயிருந்து இப்பொழுது உபகாரவேதனம் பெறும் ஸ்ரீ கதிரவேலு, ஸ்ரீ தம்பையா, இந்துசாதனம் சைவப்பிரகாசயந்திரசாலை யென்னுமிவைகளின் மனேஜராக நீடித்த காலம் கடமைபார்த்து இறந்த ஸ்ரீ. கந்தையாபிள்ளை யென்னுமிவர்களின் தாயாருமாகிய ஸ்ரீமதி சி. தங்கமுத்து என்னும் மூதாட்டி சென்ற திங்கட்கிழமை 20-1-36 நீர்வேலியிலுள்ள தமது இல்லத்தில் தமது மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் உறவினர் அயலவர் முதலானேர் துயருற இவ்வுலக வாழ்வை ஒருவினர். இறக்கும்போது வயசு 84. இம் மூதாட்டியின் அறிவொழுக்கம் பெருந்தன்மை அந் நீர்வேலியிற் பிரஸ்தாபமானதாகும். இவரது பேரப்பிள்ளைகள் கட்டுநாஸ் தோட்டை பகிரங்கவேலைப்பகுதிக்கந்தோரில் கடமை பார்க்கும் திருவாளர்கள் க. இரகுநாதன், சிதம்பரநாதன், க. கந்தையா ஆகியமூவருமாம்.

# 3000 இற்றலியர் படுகொலை.

## பல்லாயிர இற்றலியர் சிறை

### வடபகுதியில் இற்றலியரின் சேதம் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

அபிசீனிய மந்திரி மரணம் — அபிசீனிய இளவல் வீரம்

தென் பகுதியில் தோல்வி. — வாலிபப்படைச் சேனாதிபதி.

### அபிசீனிய வெற்றிக்குக் காரணம்?

#### கொடிய யுத்தம்.

வடக்குப் போர்முனையில் சென்ற திங்கட்கிழமையன்று ஒரு பெருத்த யுத்தமாரம்பமாயிற்று. அது இன்றளவும் நடைபெற்று வருகிறது. அதில் ஆயிரக்கணக்கான இத்தாலியர் கொல்லப்பட்டனரென்று அபிசீனிய அரசினர் அறிக்கையொன்று கூறுகிறது. பீரங்கிகளுள்பட ஏராளமான யுத்த தளவாடங்களை அபிசீனியர்கைப்பற்றியிருக்கின்றனர். மூன்று இன்ஜின் ஆகாயவிமான மொன்றையும் தாங்கள் சுட்டு வீழ்த்திவிட்டதாக அபிசீனியர் சொல்லுகிறார்கள்.

இதுவரையில் நடந்ததைவிட கோரமான யுத்தம் இப்பொழுது நடைபெற்று வருகிறது. நேருக்கு நேராகக் கைச்சண்டையும், விமானங்களையும் யந்திர பீரங்கிகளையும் கொண்டு யுத்தமும் நடக்கின்றது. இத்தாலியரைப் பல விடங்களில் அபிசீனியர் முறியடித்துவிட்டனர். இத்தாலிய சைந்யங்கள் அபிசீனியரால் தாக்கப்படுகின்றன. சில முக்கியமான விடங்களிலிருந்து இத்தாலியர் வெருட்டவும் பட்டிருக்கின்றனர்.

#### மந்திரி மரணம்

அபிசீனிய யுத்தமந்திரி ராஸ் முலு கெட்டாவின் சைந்யங்கள் மாகாலிக்குக் கிழக்கே போரில் ஈடுபட்டிருக்கின்றனவாம்.

ராஸ்முலு கெட்டா நோய்காரணமாக இறந்தாரென்று ஊர்ஜிதம் செய்யப்படாத செய்தியொன்று கூறுகிறது. ராஸ்முலு கெட்டாவுக்கு எழுபது வயதுக்கு மேலாகிறது.

#### வடபகுதியில் பெரும் வெற்றி

மாகேலுக்குத் தென்மேற்குப் பகுதியில் சென்ற வெள்ளிக்கிழமை கொடிய யுத்தம் ஒன்று நிகழ்ந்தது. அந்த யுத்தத்தில் 1800 இற்றலியர் கொல்லப்பட்டனர்; 800 வெள்ளை வீரர் சிறையாக்கப்பட்டனர். இவர்கள் தாமாகவே அபிசீனியரிடம் சரண் புகுந்தனர் என்று அடிஸ் அபாபாச் செய்தி ஒன்று கூறுகிறது.

#### தென்முனையில் தோல்வி.

வடக்குப் போர் முனையில் அபிசீனியர் வெற்றி பெற்று வருகின்றார்கள் எனினும், தெற்குப் பகுதியிலே அவர்கள் தோல்வி யடைந்து வருகின்றார்கள், நெகெலி என்னும் இடத்தை இற்றலியர் இப்போது கைப்பற்றியிருக்கின்றனர்.

#### சக்கரவர்த்திமகன் வீரம்.

அபிசீனியச் சக்கரவர்த்தியின் 14 வயதுடைய புதல்வன், அபிசீனியாவில் உள்ள வாலிபப் படை ஒன்றன் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இன்னும் சில நாட்களில் தமது சேனா வீரருடன் யுத்தமுனைக்குச் செல்வார்.

#### மழை.

அபிசீனியா வெங்கணும் பெரும் மழை பெய்திருக்கிறது. இதனால் இற்றலியப்படைகள் மிகுந்த வசதியீனம் அடைகின்றன.

—o—

### பிந்திக் கிடைத்த செய்திகள்.

#### 3000 இற்றலியர் கொலை

மாகேலுக்குச் சமீபமாக நடந்து வரும் யுத்தம் இன்னும் நின்றபாடில்லை, மும்முரமாக இருதரப்பினர்க்குமிடையே கொடிய யுத்தம் நடைபெறுகின்றது. இந்த யுத்தத்தில் 3000 இற்றலியர் கொலையுண்டனர் என்றும் பல்லாயிரவர் சிறையாயினர் என்றும் அடிஸ் அபாபாவில இருந்து இன்று கிடைத்த தந்திச் செய்தி கூறுகிறது.

#### மழையே காரணம்

அபிசீனியரின் இந்த மகத்தான வெற்றிக்குக் காரணம் மழையேயென்று சொல்லப்படுகிறது இன்னும் டெஸிக்குச் செல்லும் தெருப்பாதையும் பங்கப்படுத்தப்பட்டது.

---

### செட்டியார்களின் மனு.

இலங்கை நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அரசாங்கசபையிலே தங்கள் கருமாதிகள் சிறப்பாகக் கவனிக்கப்படுமாறு தங்களுடைய சாகியப்பிரதிநிதி ஒருவரையும் அரசாங்கசபை அங்கத்தவராகத்தெரிந்து நியமனஞ் செய்யவேண்டுமென்று கேட்டுத் தேசாதிபதிக்கு மனுப் பண்ணியிருக்கின்றார்கள். இவ்விஷமாய் அவர்கள் 1931-ம் ஆண்டு முதலே அரசினருடன் கடிதப் போக்குவரத்து நடத்திவந்து தற்போது முன்னிலும் அதிகமாக துண்டிப்பிடித்து நிற்கின்றார்கள் அவர்கள் தேசாதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கும மனுப் பத்திரத்திலே இலங்கையிலுள்ள செட்டியார்கள் இத்தீவிலே ஐம்பதினாயிரம் ஏககா நிலத்தைச் சொந்தமாகக் கொண்டிருப்பதாயும், பலவிதமான தொழிற்துறைகளிலும் அவர்கள் பத்துச கோடி ரூபா பணமுதல் விட்டிருப்பதாயும், இப்பணத்திலே இரண்டரைக்கோடி ரூபா கேட்டுகளிலும் இரண்டு கோடி ரூபா ஈடுகளிலும் நாற்பது லட்சம் ரூபா நகை அடைவு பிடிப்பதிலும், மூன்று கோடி ரூபா தோட்டங்களிலும விடப்பட்டிருப்பதாயுந் தெரிவித்திருக்கின்றார்கள். சென்னை, பர்மாச் சட்டநிரூபண சபைகளிலும் தங்கள் செட்டிய சாகியத்தார் ஒவ்வோர்பிரதிநிதியைக் கொண்டிருப்பதாகவும் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள்

---

### இத்தாலிக்கு அமெரிக்க எண்ணெய்க் கப்பல்.

2,550 டன் கனமுள்ள ஒரு அமெரிக்க எண்ணெய்க்கப்பலை இத்தாலியர் வாங்கியிருக்கிறார்கள். இன்னும் மூன்று சிறிய எண்ணெய்க் கப்பல்களை வாங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்தக்கப்பல்களில் பெட்ரோல் இத்தாலிக்கு ஏற்றிச்செல்லப்படுமென்று தெரிகிறது அங்கு சென்றதும் இத்தாலியர் கப்பல்களிலிருக்கும் இரும்பை உருக்கி யுத்த தளவாடங்கள் செய்வார்கள் என்று தெரிகிறது.

---

### சூயஸ் கால்வாய்.

1935-ல் சூயஸ்கால்வாய் வழியாகச் சென்றகப்பல்களின் மொத்தம் 6,992 இத்தொகை 1929-ம் வருஷத்திலிருந்து உள்ள தொகைகளெல்லாவற்றிலும் பெரிதாகும். சென்ற வருஷத்தில் 5,663 மட்டுமே. வருமான மொத்தமானது 11,836,000 பவுண் (1934-ல் 11 420,000 பவுண்) ஏராளமான இத்தாலியக்கப்பல் போக்குவரத்து இருக்கிறபடியின் கப்பல்களின் எண்ணிக்கையும் வருமானத்தொகையும் முறைவையே காட்டியிருக்கும்.

### இந்திய வாலிபர்கள் பொறுப்பு.

இப்போது திருவண்ணாமலையிலுள்ள ரமணாஸ்ரமத்தில் தங்கியிருக்கும மிஸ்டர் பால்பிரண்டன் என்பவர் இந்திய வாலிபர் பொறுப்பைப்பற்றி பின்வருமாறு எழுதுகின்றார்

மதத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் பிணைவுக்கும் செய்கைக்கும் புராதனக் கொள்கைகளுக்கும் நவீன மாறுதல்களுக்கும் ஒரு மனிதனின் வாழ்நாள் எவ்வளவோ இடங்கொடுக்கிற தென்பதை இந்தியாவிலுள்ள ஒவ்வொரு வாலிபரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். தேசம் முன்னேற்றமடையவேண்டுமென்னும் ஆர்வத்தில் தொன்று தொட்டுள்ளபழக்கத்தில் என்னென்ன நல்ல அம்சங்கள் இருக்கின்றனவோ அவற்றை அவர் கைவிட்டுவிடக் கூடாது: உலகத்திலேயே இந்தியாவில்தான் ஆத்மார்த்தமான ஞானமிருந்துவருவதை நான் காண்கிறேன் ஆதலால் வரப்போகும் சந்ததியார்களுக்கு மனம்மட்டும் இருக்குமாயின் இந்தப் புராதனமான புனிதநாட்டைப் பெரிய அந்தஸ்துக்குக் கொண்டுவந்துவிட முடியும்: விஞ்ஞான சாஸ்திரீய கைத்தொழில்களைப் பெருக்குங்கள். சுகாதாரம் செழிப்ப தேசக்ஷேமம் முதலியவை வளருவதற்கான மார்க்கத்தைத் தேடுங்கள். ஆனால் எல்லா உண்மை நாகரீகத்துக்கும் அஸ்திவாரமாக இருக்கக்கூடிய உங்களுடைய என்றும் அழியாத ஆத்மார்த்த ஞானத்தின் தத்துவங்களை மட்டும் மறந்துவிடாதீர்கள்.

மேல்நாடுகளிலிருந்து பரவி இருக்கும் திரவிய நோக்கத்திலும் யந்திர மோகத்திலும் இந்தியவாலிபர்கள் அதிகமாக ஈடுபட்டு விடுவார்களென்று நான் நினைக்கவில்லை. ஆனால் அந்தந்த இடங்களில் அது தேவைதான். நீங்கள் மட்டும் ஆச்சரியகரமான புராதன புத்தி நுட்பத்திற்கும், விவேகத்துக்கும் பொக்கிஷதாரகளென்பதையும், இன்னமும் உங்கள் மத்தியில் பெரிய மகான்கள் சஞ்சாரம செய்துகொண்டிருக்கின்றனர் என்பதையும் மறந்துவிடாதீர்கள். இந்தியாவின் தத்துவார்த்த ஞானமகானுக்குரான் பெருகி தேசம் பெரிய மேன்மையை யடையட்டும்.

---

### வெள்ளி ரதம்.

இரங்கூனில் பசுமந்தான வெள்ளிரத சம்பந்தமான வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. தைப்பூசத்திற்குள்ளாக வெள்ளிரதம் பெப்பனிடப்பெற்றுவிடுமென்று தெரிகிறது. காரைக்குடியிலிருந்து இங்கு வந்துள்ள தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர்.

---

### வயின் மழை

மழை, கல் மழை யென்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் வயின் மழையைப்பற்றிக் கேள்விப்பட்டது கிடையாது. பிரான்ஸிலுள்ள டின்னூன் நகரில் சமீபத்தில் "வயின் மழை" பெய்தது. மழைஜலம் சிவப்பு நிறமாக இருந்ததால் ஜனங்கள் தண்ணீரை ரசாயன நிபுணர் பரிசோதகருக்கு அனுப்பினார்கள். பரிசோதனையில் தண்ணீரில் ஒயின் சேர்ந்திருப்பதாகக் காணப்பட்டது. தண்ணீரில் ருசியும் வயினுடைய ருசியை ஒத்திருந்தது. காற்றில் திராக்ஷைப்பழங்கள் வாரிச் செல்லப்பட்டு வயினாக மாறியிருக்கவேண்டுமென்று ஆராய்ச்சிக்காரர்கள் தெரிவித்தனர்.

---

### மற்றொரு நடிகைச் சிறுமி.

ஹோலிவுட்டில் சேமுவல் கோல்டுவின் பிலிம் கம்பெனியில் நடிப்பதற்கு ஒப்புக் கொண்டு பொனிட்டா கிரான்வில் என்ற பன்னிரண்டு வயதுடைய சிறுமி ஓர் ஒப்பந்தம் செய்திருக்கிறாள். அவள் "இம் மூன்றும்" என்ற படத்தில் மிரியம் ஹாப்கின்ஸ், மெர்ல், ஆபரன் முதலியவர்களோடு நடிக்கிறாள். அவளுக்கு ஆரம்பத்தில் வாரத்திற்கு இருநூறு பவுண்கள் சம்பளம் கொடுக்கப்படும். நாளடைவில் சம்பளம் 7 வருடங்களில் வாரத்திற்கு 1500 பவுண்கள் வரையில் உயர்த்தப்படும்.

## இந்திய அரசியற் குறிப்புக்கள்

### தேதியை மாற்றவேண்டாம்

இந்தியா சட்டசபையில் உள்ள காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு சவுகரியம் செய்யவும் மார்ச்சுமாத மூன்றாவது வாரத்தில் கல்கத்தா நகரசபைத் தேர்தல் நடக்கவிருப்பதாலும், காங்கிரஸ் கூட்டத்தை மார்ச்சு மூன்றாவது வாரத்திலிருந்து ஏப்ரல் 7-ந் தேதிக்கு ஒத்திவைக்க உத்தேசித்திருப்பதாக காங்கிரஸ் தலைவரிடமிருந்து உபசரணைச் சபைக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. மார்ச்சுக்கு அப்பால் காங்கிரஸை ஒத்திவைக்கக்கூடாதெனச் சில அங்கத்தினர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். உபசரணைச சபையினர் காங்கிரஸ் கூடும் தேதியை மாற்றவேண்டாமெனத் தலைவரை மீண்டும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். ஆனால் தலைவர் பிரியப்படி ஏப்ரல்மாத ஆரம்பத்தில் தான் காங்கிரஸ் கூடுமெனத்தெரிகிறது.

— —

### நெல்லூர் அரசியல் மகாநாடு

நெல்லூர் ஜில்லா அரசியல் மகாநாட்டை நடத்துவதற்கான வரவேற்புச் சபையின் கூட்டம் சென்றவாரம்நடைபெற்றது. ஸ்ரீமான் எஸ் ஸ்ரீநிவாச ஐயங்கார் மகாநாட்டில் தலைமை வகிக்கவேண்டுமென்றும், ஜனாப் அப்துல் ஹமீத்கான் திறந்துவைக்கவேண்டுமென்றும், ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி கொடியேற்றி வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது. மகாநாடு அடுத்த மாதம் 22, 23-ந் தேதிகளில் நடைபெறும்.

— —

### பண்டித ஜவஹர்லால்

பண்டித ஜவஹர்லால் நேரு சனிக்கிழமையன்று லண்டனுக்குப் புறப்பட்டார். பிப்ரவரிமாத ஆரம்பம் வரையில் அவர் லண்டனில் தங்கியிருப்பார். இந்த மத்தியில் ஸ்ரீமதி கமலாநேரு லாஸேனுக்கு அழைத்துச் செல்லப்படுவார். ஜவஹர் பிப்ரவரிமாத ஆரம்பத்தில் தம் மனைவியைப் பார்க்க லாஸேனுக்குச் செல்லுவார். தேர்ந்தெடுக்கப்பட்டால் தாம் காங்கிரஸ் தலைமையை ஏற்றுக்கொள்ளப் போவதாகவும், தம் மனைவியின் தேகநிலையால் தடுக்கப்பட்டாலன்றித் தாம் லட்சுமணபுரி காங்கிரஸுக்குப் போகத் தீர்மானித்திருப்பதாகவும் பண்டித ஜவஹர்லால் அறிவித்தார்.

— —

### காந்திஜீயின் நிலைமை.

மகாத்மா ஆமதபாத்தில் இப்போது பூரண ஓய்வுடன் இருக்கிறார். வித்தியா பீட மேல் தளத்தின்மீது ஒரு கொட்டகை போடப்பட்டு அதில் காந்திஜி தங்கியிருக்கிறார். அவர் அங்குதான் இரவிலும் தூங்குகிறார். ஒருவரும் அவரைக் காண அநுமதிக்கப்படுவதில்லை.

பொதுவாக அவரது தேகநிலை திருப்தியாக விருக்கிறது. அடிக்கடி இனி அவரது சௌக்கியத்தைப்பற்றி அறிவிக்க வேண்டிய அவசியமில்லாமையால் அவரது காரியதரிசி அவ்வப்போது அறிக்கைகள் வெளியிடுவதை நிறுத்திக்கொண்டார். மாலை நேரத்தில் அவர் வித்யா பீட மேல் தளத்தில் பிரார்த்தனை நடத்துகிறார். இரவில் திறந்த வெளியில் அவர் ஒரு கட்டில்மீது படுத்துக்கொண்டிருக்கிறார். சர்தார் படேல் மட்டும் அவருடன் தங்கியிருக்கின்றார்.

—

### ராய்பகதூர் எம் ஸி ராஜாவின் பிரேரணை

இந்தியா சட்டசபையின் அடுத்த கூட்டத்தில் பின்கண்ட தீர்மானத்தைக் கொண்டுவரப்போவதாக, ராவ் பகதூர் எம். ஸி. ராஜா அறித்தல் கொடுத்திருக்கிறார்:- 1936-ம் வருஷம் பிப்ரவரி மாதம் முதல் கொண்டு சென்னைக்கும், ரங்கூனுக்கு மிடையில் நடக்கும் நேரான தபால் சேவையை அரசினர் உத்தேசப்படி நிறுத்தினால் பொதுவாகத் தென்னிந்தியர்களுக்கும் முக்கியமாக வியாபாரிகளுக்கு கஷ்டமுண்டாகும். இதனால் இந்தத் தபால் சேவையை நிறுத்தக்கூடாதென்றும் இதர வழிகளில் செய்தது போலவே அந்த வழியிலும் 31-2-37 வரை தபால்களைக் கொண்டுபோக ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் இச்சபை சபையுடன் கூடிய இராஜப் பிரதிநிதிக்கு சிபார்சு செய்கிறது.

### சர்வதேச சங்கமும் இந்தியாவும்.

வரப்போகும் இந்தியச் சட்டசபைக் கூட்டத்தில் திரு. அகிலசந்திரதத்தர் சில தீர்மானங்களைத் தாம் எடுத்தாளப்போவதாக அறிவித்தல் கொடுத்திருக்கிறார்: அவற்றில் ஒன்று இந்தியா சர்வதேசங்கத்தை விட்டு உடனே நீங்கிக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

— —

### இந்திய வீரர் அநுதாபம்.

மன்னர்பிரான் தேகவியோகத்தைக் குறித்து டக்டர் தாகூர், ஸ்ரீ ஜூத் புலாபாய் தேசாய், மகாத்மாகாந்தி முதலியோர் இராஜப்பிரதிநிதி மூலமாகப் பின்வருமாறு அநுதாபத் தந்திகள் அநுப்பியிருக்கின்றனர்:—

டாக்டர் ரவீந்திரநாத தாகூர்:—

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குத் திடீரென நேர்ந்துள்ள இந்தத் துக்கத்தை நாங்கள் யாவரும் பகிர்ந்து கொள்ளுகிறோம். பிரிட்டிஷ் பிரஜைகள் தங்கள் சக்கரவர்த்தியை இழந்த விட்ட நஷ்டம் மாத்திரம் அல்ல இது. அந்தரங்க சுத்தியாய், பெரிதும் சமாதானப்பற்றுக் கொண்ட ஒருவரை முழு உலகமுமே இழந்துவிட்டது.

— —

### ஸ்ரீ புலாபாய் தேசாய்

இந்தியச் சட்ட சபையில் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஸ்ரீ புலாபாய் தேசாய், வைசிராயின் அந்தரங்கக் காரியதரிசிக்கு அனுப்பியுள்ள தந்தியாவது:—"மேரி ராணிக்கும், ராஜகுடும்பத்தினருக்கும் எனது மரியாதையான துக்கத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

— —

### காங்கிரஸ் தலைவர் பதவி.

ஸ்ரீமான் டி. பிரகாசம் பின்வருமாறு எழுதுகிறார்.

இன்னும் இரண்டு தினங்களுக்குள் நாம் காங்கிரஸ் அக்கிராசனரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தத்தேர்தல் பொறுப்பு இப்பொழுது பிரதிநிதிகளின் மீது விழுந்திருக்கிறது. இந்தியா முழுவதும் மொத்தம் ஆயிரம் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அவர்கள் அக்கிராசனரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்தத் தேர்தலுக்கு முன்பு பிரதிநிதிகள் தங்கள் மனதில் காங்கிரஸ் அனுஷ்டிக்க வேண்டிய கொள்கையைப்பற்றி தீர்மானித்துக் கொள்ளவேண்டும். பாபுராஜேந்திரப் பிரஸாதும் காரியசபையும் இது விஷயமாய் ஒன்றுமே கூறவில்லை.

காங்கிரஸ் இட்டத்தை நன்கு நிறைவேற்றுபவராய் அக்ராசனர் இருக்கவேண்டும். முன்பு பல தவறுகள் செய்யப்பட்டிருக்கின்றன. 15 வருஷ காலங்களாக சட்டசபைப் பிரவேசம் வேண்டாமென்று கூறின மகாத்மாகாந்தி இப்பொழுது சட்டசபை பிரவேசம் காங்கிரஸ் தர்மம் என்று கூறினார். லக்ஷ்மணபுரி காங்கிரஸ் பிரதிநிதிகள் காங்கிரஸ் கொள்கையை நிர்மாணிக்க வேண்டுமென்று அவர் கூறினார். பிரதிநிதிகள் கொள்கைத் தீர்மான விஷயமாய் யாதொரு தவறும் செய்து விடக் கூடாது.

—

### அபேதவாதக் கட்சி

சென்றவாரம் அபேதவாதக் கட்சியின் நிர்வாகசபைக் கூட்டம் நடைபெற்றது. அதில் கட்சியின் உள் நிர்வாகம் சம்பந்தமான விவரங்களும் மகாநாட்டின் தீர்மானங்களினால் எதிர்காலத்தில் செய்யவேண்டிய வேலை விபரமும் விவாதிக்கப்பட்டன.

—

### ஸ்ரீமதி சோபியா சோம்ஜியின் விவாகம்

காங்கிரஸ் ஊழியரான ஸ்ரீமதி சோபியா சோம்ஜிக்கும் டக்டர் கான் சாகிபின் குமாரரான ஜனாப் சதலைக்கும் சென்ற 26-ந் தேதி விவாகம் நடந்தது.

# குடும்பக் கலகப் பயன்.

## மூவர்மீது திருட்டுக் குற்றம்.

## வலிகாமம் வகுப்பில் குடும்பப் பிணக்கு

## விசாரணையில் எதிரிகள் விடுதலை

[நமது நிருபர்.]

வட்டுக் கோட்டையில் வலிகாமம் வகுப்பைச் சேர்ந்த 1 கந்தசாமி 2 வேலுப்பிள்ளை 3 முருகுப்பிள்ளை என்பவர்கள் அவ்வூர் S. கந்தசாமியின் வீட்டில் அவர் இல்லாத நேரம் வீட்டுக் கதவுப் பூட்டை முறித்து உட்சென்று, அங்கிருந்த பொருள்களைக் களவாடினர் என்று சென்ற வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் குற்றம் சாட்டப்பட்டனர்.

வழக்காளி சார்பாக பிறக்றர் ஸ்ரீ ... நரும், எதிரிகள் சார்பாக பிறக்றர் சாம் சபாபதியும் ஏற்பட்டனர்.

விசாரணையில் வழக்காளியாகிய S. கந்தசாமி பின்வருமாறு சாட்சியம் பகர்ந்தார்:-

"தற்போது எனக்கும் என் மனைவிக்குமிடையே அதிகம் பிணக்கு உண்டு. எங்கள் இருவர்க்குமிடையே யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிஸ்தலத்தில் வழக்குகளும் நடக்கின்றன. 1-ம் எதிரி கந்தசாமியும் 3-ம் எதிரி முருகுப்பிள்ளையும் என் மனைவியின் சகோதரராவர். 3-ம் எதிரி மைத்துனன். இது சம்பவம் நடந்த அன்று, எனது வீட்டில் உள்ள பொருள்களின் மீது தடைக்கட்டளை பிறப்பித்து, இராமலிங்கம் என்னும் பிஸ்கால் சேவகனுடன் இவ்வெதிரிகள் வந்தனர் என்று என் சகோதரன் மூலமாக நான் கேள்வியுற்றேன்.

"இந்தக் களவுகளும், அன்று சாயுங்காலம் 5 மணியளவிலேயே நிகழ்ந்தன

"எனது மனைவியும் மகளும் என் மீது தாபரிப்பு வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர். வல்லிபுரம் என்பவரின் மனைவியுடன் நான் சேர்ந்து கட்டுக் கொண்டிருக்கிறேன் என்ற எண்ணத்தின் பேரிலேயே அவர்கள் என் மீது வழக்குத் தொடர்ந்தனர். வல்லிபுரமும், தனது மனைவி மீது விவாகநீக்க வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

### சமாதான முயற்சி

"நான் இவை எல்லாவற்றையும் சமாதானமாய்த் தீர்க்க முயற்சித்தேன். இவ்வழக்குகள் தொடரப்படுதலில் 1-ம் 3-ம் எதிரிகளே உதவிபுரிந்தவர்கள். இவ்வழக்குகளைச் சமாதானத்துக்குக் கொண்டுவர முன், தடைக்கட்டளை வந்தது. இந்த எதிரிகள் வந்து, பூட்டை முறித்து பெட்டியை எடுத்துச் செல்லும்போது எனது சகோதரன் கண்டவன்.

### பட்டின விஜயம்

"அந்த நேரத்தில் நான் யாழ்ப்பாணப்பட்டினம் சென்றிருந்தேன். போகும்போது வீட்டுக் கதவைப் பூட்டிவிட்டே சென்றேன். அன்று இரவு $7\frac{1}{2}$ மணி வரையில் தான் நான் அடுத்த வளவில் என் சகோதரனைக் கண்டேன்.

### எதிரிகள் விடுதலை

இதன்பின் நீதிபதி எதிரிகளைச் சுத்தவாளிகள் எனக்கண்டு, அவர்களை விடுதலை செய்தார்.

## இலங்கையிற் பீங்கான் கைத்தொழில்.

இப்போது இலங்கையில், அந்நிய நாடுகளில் இருந்தே பீங்கான் வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. பீங்கான் பொருள்கள் செய்தற்கான மண் இலங்கையில் இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. கொடபொப்பகுதி மண்ணே மிகச் சிறந்ததாயிருக்கின்றது. பீங்கான் பொருள்களை இலங்கையிற் செய்விப்பதற்கான முயற்சிகள் செய்யப்படுகின்றன.

## Notice of Sale

## விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் 7842-ம் இலக்க எட்டு வழக்கில் 1935 ஆம் கார்த்திகை மீ 28-ம் தேதியைக் கொண்ட சேட்டுக் கட்டளைப்படி கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் காணிகள் 1936 ஆம் மாசி மீ 24-ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

எதிரி வழக்காளிகளுக்குக் கொடுக்கவேண்டிய தொகையின் விபரம் ரூபா 1185 81 ம் 3-4 35 திகதி தொடக்கம் இறுக்கும் வரைக்கும் ஆம் 1-க்கு 100 க்கு 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 118 55 வன் மேற்படி வளக்காளி C. S. K. சக்கையா செட்டியார் மன்னூர் எருக்கலம்பிட்டி அல்லாப்பிச்சை நாகூரான் எதிரி.

### விபரம்.

வடமாகாணம் மன்னார்ப்பிரிவு மன்னூர் கிழக்குகளுக்குச் சேர்ந்த எருக்கலம் பிட்டியிருக்கப்பட்ட தென்னந்தோட்டம் கிழக்கிருந்து மேற்கு 100 யார் வடக்கிருந்து தெற்கு 75 யார் எல்லை கிழக்கு வளியும் வடக்கு மீருசாயிபு பிச்சைதம்பி மரக்காயரின் ஆதனமும், கி. முகம்மது காசிமின் ஆதனமும், மேற்கு ஆதம்லெவ்வை மீருலெவ்வையினதும் பங்காளருக்குமுடைய ஆதனம், தெற்கு மொகிதீன் சுப்புடையார் செய்தாவின் ஆதனம். இதில் சொரியலாய் $\frac{4}{5}$ பங்கு.

2. டி மன்னூர் மேற்குக்குச் சேர்ந்த கறுப்பன் குடியிருப்பில் குடியிலக் காணி கிழக்குப்பக்கம் நீளம் 60 யார் மேற்கு நீளம் 60 யார், வடக்கு 37 யார், தெற்கு 37 யாரில் தென்னை மரங்களும், எல்லை கிழக்கு நாகூரான் சப்பனையின் மரக்காயரின் ஆதனம், வடக்கு செய்தாக்காசிம் மரக்காயர் முகம்மது உசன் ஆதனம், மேற்கு வாப்பா மரக்காயர் முகம்மது காதரின் பங்காளரின் ஆதனம், தெற்கு கவிரியல் பெனமரியம்மாவினதும் மற்றவர்களின் ஆதனமும்.

3. டி கறுப்பன் குடியிருப்பில் வளவடி தென்னந்தோட்டம் கிழக்கிருந்து மேற்கு 60 யார், வடக்கிருந்து தெற்கு 106 யார் எல்லை கிழக்கு ஆசனயிலுசிதறூ முகம்மதுவின ஆதனம். வடக்கு பிதுப்புலோறஞ்சுக்கு பங்காளருக்குமுடைய வாதனமும் வெறுந்தரையும், மேற்கு காலஞ்சென்ற யேசுதாசன் சத்தியநாதனின உரித்தாளருடைய வாதனம், தெற்கு சப்பனயிலுப்பக்கீர் மைக்பெண் முகம்மது செலயினதும் பங்காளருக்குமுடைய வாதனம் இதில சொரியலாய் அரைவாசி.

4. டி கறுப்பன் குடியிருப்பு இறைவனடித் தென்னந்தோட்டம் கிழக்கிருந்து மேற்கு 62 யார், வடக்கிருந்து தெற்கு 6. யார், எல்லை கிழக்கு அந்தோனி கிறிஸ்தோமகுருசவின் ஆதனம், வடக்கு நாகூரான் சப்பனயிலு மரைக்காயரின் ஆதனம் மேற்கு என்தாக்கி பேதுறு மற்றும் மற்றவர்களினதும் ஆதனங்களும், தெற்கு பிதுப்புலோறஞ்சும் பங்காளரும் வெறுந்தரையும், மற்றவர்களும் இதிற் சொரியலாய் அரைவாசி.

5. டி மன்னூர் கிழக்கு எருக்கலம்பிட்டியில் கோட்டையடி கிழக்கிருந்து மேற்கு 120 யார், வடக்கிருந்து தெற்கு 250 யார், எல்லை கிழக்கு மதருசிபு மீருசாயிபு மற்றவர்களின் ஆதனமும், வடக்கு எதிரிக்கும் பங்காளருக்கும், ஆதனம் மேற்கு சவுண்டேர்த்த நிலம், தெற்கு காலஞ்சென்ற அபுபக்கர்லெவ்வை மீருலெவ்வையின் உரித்தாளரின் பங்கும். இதிற் சொரியலாய காலவாசி.

6. டி மன்னூர் மேற்கு உலரியமேற்கு வடி பனந்தோட்டம், கிழக்கிருந்து மேற்கு 75 யார், வடக்கிருந்து தெற்கு 100 யார், எல்லை கிழக்கு வடக்கு மேற்கு தெற்கு சப்பனையிலு மரைக்காயர் கபீப்பு முகம்மதுவும் பங்காளருக்குமுடைய வாதனம், இதிற் சொரியலாய் $\frac{2}{6}$ பங்கு.

7. டி வந்த கூடல் பனையடித் தோட்டம் கிழக்கிலிருந்து மேற்கு 125 யார் வடக்கிலிருந்து தெற்கு 150 யார் எல்லை கிழக்கு பிதுப்புசலமோனதறுகவும் பங்காளருக்குமுடைய ஆதனம் வடக்கு எதிரிக்கும் மற்றவர்களுக்குமுடைய ஆதனம் வாழ்வ நாகூரானுக்கும் பங்காளருக்குமுடையதும் மற்றவர்களுக்குமுடைய ஆதனம் தெற்கு அசனலெவ்வை மைக்பெண் ஆசனாச்சியாவின் ஆதனமும் பங்காளருக்குமுடைய ஆதனம் இதிற் சொரியலாய் $\frac{2}{6}$ பங்கு.

8. டி கறுப்பன் குடியிருப்பில் பூச்சலடிக்காணி கிழக்கிலிருந்து மேற்கு 175 யார் வடக்கிலிருந்து தெற்கு 250 யார் எல்லை கிழக்கு புதுக்குடியிருப்பிலிருக்கும் பள்ளிவாசலுக்குச் சேர்ந்த தென்னந்தோட்டமும் அலிகாசிலெவ்வையின் ஆதனமும் வடக்கு கப்பயிலு மரைக்காயர் மைக்பெண் முகம்மது சலேகா உம்மாவின ஆதனமும் பங்காளருக்கும் மேற்கு சவிரியகோவிலதும் பங்காளர்க்குமுடைய ஆதனம் தெற்கு நாகூரான் சப்பாயிலு மரைக்காயரினதும் மற்றவர்களினதும் ஆதனமும்.

P. Rajaretnam,
கொமிஷனர்.

Mis 263. 27-1-36

## புருஷனை அடித்த பூவை.

### வீட்டிற்கும் நெருப்பு வைத்தாள்.

### பைத்திய ஆஸ்பத்திரியில் வைத்தியம்.

(நமது சொந்த நிருபர்.)

தங்காலையைச் சேர்ந்த வெலிபதைக கிராமத்தில் வசிக்கும் ரோசலின் என்னும் இளம் பெண், தனது வீட்டிற்கு நெருப்பு வைத்து, அயலவர் வீட்டிற்கு நெருப்பு வைக்க முயற்சிக்கையிற் சிறைபாக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்புவிக்கப்பட்டாள்.

இவளின் கணவன் நீதிஸ்தலத்திற்கு வந்து பின்வருமாறு முறையிட்டான். "இவள் இப்போது சில காலமாக வீட்டில் தாறுமாறாக நடந்து வந்திருக்கிறாள் இறந்த சில நாட்களுக்கு முன் என்னைக் கையால் அடித்ததுமல்லாமல், ஒரு கத்தியால் என் தலையில் வெட்டினாள் அதனால் உண்டான காயம் இன்னும் மாறவில்லை

"4 மாத காலமாக இவள் பைத்தியம் கொண்டவளாயிருக்கிறாள். சுதேச வைத்தியர் பலர் சிகிச்சை செய்தும், இவள் குணமடைவதாய்த் தெரியவில்லை. எனவே அவள் கண்டபடி, காரணமின்றித் திட்டி வந்திருக்கிறாள்.

நீதிபதி ஸ்ரீ R. R. செல்வத்துரை குறித்த ரோசலின் என்னும் பெண்ணைப் பைத்தியகார ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி உத்தரவிட்டார்.

## கொழும்பிற் குற்றம் அதிகரித்தல்.

சென்ற டிசம்பர் மாதத்தில் மற்றெல்லா மாதங்களிலும் பார்க்க, கொழும்புப் பகுதியில், கொலை களவு, அடிபிடி சண்டை முதலாம் குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன என்று பொலிஸ் பகுதியின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

## மாணவரின் ஒத்துழையாமை.

கொழும்பு சுதேச வைத்திய கலாசாலை மாணவர்களில் 100 பேர் கலாசாலை அதிகாரிகள் சில பாடங்கள் கற்பிப்பதைத் தவிர்த்தமையால், கல்லூரிக்குப் போவதை நிறுத்திக் கொண்டனர்.

## சிலாபத்தில் மலேரியா.

சிலாபத்திலே மாதம்பை, மாரவிலப்பகுதிகளில் மலேரியா நோய் பரவி வருகிறதென்று ஓர் செய்தி கூறுகிறது,

## ஆஸ்திரியாவில் தற்கொலை

ஆஸ்திரியா தேசத்தில் சென்ற மாதத்தில் மாத்திரம் 49 பேர் தற்கொலை செய்திறந்திருக்கின்றனர். பொருளாதார நெருக்கடியே இப்படி இவர்கள் தம் வாழ்வை இடையில் முடிப்பதற்குக் காரணமாம்.

## மிதமிஞ்சிய சாராயம்.

ஈழத்துறையில் உள்ள 8 சாராய உற்பத்திச்சாலைகளிடமும் ஆண்டுதோறும் 6 லட்சம் கலன் சாராயமே அரசினர் பெற்றுவந்தனர் ஆனால் சென்ற ஆண்டிலே அவ்வுற்பத்தியாளர் 1 லட்சம் கலன் சாராயத்தை மேலதிகமாக உற்பத்திசெய்திருக்கின்றனர். இந்த 1 லட்சம் கலன் சாராயத்தையும் எப்படி வாங்குவது என்று அரசாங்க மதுப்பகுதியார் ஆலோசித்துவருகின்றனர்.

# திருத்த முயற்சித்தவர்க்குக் கத்திக் குத்தாம்!

## மாமன் வீட்டு வழியில் மைத்துனன் வீச்சு.

## சண்டித்தனப் பேச்சிற் கொண்டுள்ள கோபம்.

## நீதிஸ்தலத்தில் விசாரணை விபரம்.

(நமது நிருபர்)

சென்ற வியாழனன்று, யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில், கோக்குவில் கிழக்கைச் சேர்ந்த பிரம்படியில் வசிக்கும் கந்தையா செல்லத்துரை என்பவர் அவ்வூர் கந்தையா ராவணமுத்து என்பவரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்ட வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

### வழக்காளி கூற்று.

விசாரணையில் வழக்காளி பின்வருமாறு கூறினர்:—

"இது சம்பவம் நடந்த தினத்தன்று எதிரியாகிய செல்லத்துரையுடன் வே. பொன்னையா என்பவர் வந்தார். அப்பொழுது நான் அவர்களை நோக்கி, "என்ன. உந்தப்பக்கத்திற் சண்டித்தனம் காட்டுகிறீர்களாம்" என்று கேட்டேன். அப்போது எதிரி "சண்டித்தனம் காட்டினுலென்ன?" என்று சொல்லிவிட்டுத் தனது மடியில் இருந்த ஆயுதம் ஒன்றை எடுத்து எனக்குக் குத்தினர். நான் கொஞ்ச இடம் நடந்து சென்று பின் நிலத்தில் வீழ்ந்து விட்டேன். ஆஸ்பத்திரியில் நான் 34 நாள் சிகிச்சை பெற்றேன்.

### குறுக்கு விசாரணை

குறுக்குவிசாரணையின் போது செல்லத்துரை பின்வருமாறு கூறினர்:—

"எதிரியுடைய சகோதரனான பொன்னுத்துரை என்னுடைய சகோதரி மீனுட்சியை விவாகம் செய்தார். இந்த விவாகத்திற்குப் பொன்னுத்துரையின் பெற்றோர் சம்மதித்துத்தான் நிகழ்ந்தது கொஞ்சக்காலம் சென்றபின் பொன்னுத்துரை தன் இனத்தவர்களின் தூண்டுதலினால், தனது மனைவியைக் கூட்டிக் கொண்டு தனது வீட்டிற் சென்று வசித்தார். பொன்னுத்துரை தனது வீட்டிற் சுருட்டு விப்பவர். அவர் வெளியிடம் சென்றிருந்த காலத்தில் முத்துவேலு என்பவரே அவருடைய கருமங்களைப் பார்த்து வந்தவர்.

### கோபதாபம் இல்லை

"எதிரிக்கும் எனக்கும் இடையே எவ்வகையான கோபதாபமும் கிடையாது. நான் என் மாமன் வீட்டுக்குப் போகும் வழியால் தான் இச் சம்பவம் நிகழ்ந்தது. நானும் அப்பாக்குட்டி பொன்னையாவுமாகத்தான் சென்றோம். நாம் செல்லும் போது ஒழுங்கையில் எதிரியையும் வேலுப்பிள்ளை பொன்னையாவையும் சந்தித்தோம். எதிரியைத் திருத்தும் நோக்கமாகத்தான், "இப்படிச் சண்டித்தனம் காட்டுகிறீர்களோ" என்று கேட்டேன். அவரை இப்படிச் சொல்லித் திருத்த இதற்கு முன்னும் தெண்டித்திருக்கிறேன்."

### வழக்குத் தவணை.

இதன் பின் V. பொன்னையா, A பொன்னையா, K. சுப்பையா, பொலிஸ் விதானை என்பவர்கள் சாட்சியம் பகர்ந்த பின் நீதிபதி வழக்கு விசாரணையை வருகிற மாதம் 11-ம் தேதிக்குத் தவணையிட்டார்.


வெளிவந்து விட்டது!

# தஞ்சை வாணன் கோவை

சொக்கப்ப நாவலருரை

பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்.

(வித்துவான் பரீக்ஷை [மதுரைத் தமிழ்ச்சங்கப்] பாலபண்டித பரீக்ஷைகட்குப் பாடமாக நியமிக்கப்பட்டுள்ள இலக்கியம்.)

இப்பதிப்பு, சென்னைச்சர்வகலாசங்கத்தாரால் வித்துவான் பட்டம் வழங்கப் பெற்றவரும், யாழ்ப்பாணம் — ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கத்துப்பரீக்ஷகரில் ஒருவரும் ஆகிய சிதம்பரம் ஸ்ரீமத் ந. சுப்பையபிள்ளை அவர்களால் பல ஏட்டுப்பிரதி கொண்டு திருத்தம் பெற்றது; பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புரை, நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறு, விஷயசூசிகைமுதலாயின சேர்க்கப் பெற்றது. யாழ்ப்பாணம் - சைவபரிபாலனசபையாரால் அச்சிட்டு வெளியிடப் பெற்றது. "பெதர்வெய்ட்" பேப்பர் "டெமி" எட்டுப்பிரமாணங் கொண்ட 400 பக்கங்களை உடையது.

விலை: ( காலிகோ பயிண்டு ) ரூபா. 3 அணா 8.
„ ( சாதா „ ) „ 3 —

தபால் ( பார்சல் ) சார்ஜ் { இலங்கை-இந்தியாவுக்கு அணா—4. மலாய்நாடு முதலியவற்றிற்கு „ —6.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் விசேஷ கமிஷன்கொடுக்கப்படும். பெறவிரும்புவோர், பின்வரும் விலாசத்திற்கு எழுதுக.

மானேஜர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
யாழ்ப்பாணம்.

# தேவை.

லண்டன் மற்றிக்குலேஷன் அல்லது அதற்குச் சமானமான பரீட்சையில் தமிழுடன் சித்தியெய்திய யாழ்ப்பாணத் தமிழ் ஹிந்து வாலிபர், சைவ பரிபாலன சபையின் அச்சியந்திரசாலைப் பகுதிக்குப் பிரதம "கிளார்க்" காயும் தொழிலாளர் தலைவராகவும் கடமை பார்ப்பதற்குத் தேவை.

தெரிவுசெய்யப்படுபவர், தம் கடமையைக் கையேற்கமுன், சென்னபட்டினத்தில் உள்ள பிரபல அச்சுக்கூடம் ஒன்றில் 6 மாதத்திற்கேனும் தம்முடைய செலவிற் பயிற்சிபெற்றுத் தராதரப் பத்திரமும் பெறுதல் வேண்டும். இதன் பின்னரே அவர் நியமிக்கப்படுவர்.

ஆரம்ப மாதவேதனம் 50/-ரூபா: வருடத்தோறும் உயர்ச்சிபெறும்.

விரும்புவோர், 1936-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதிக்குமுன் பின்வருபவருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

C. A. கந்தப்பசேகரம்,
கௌரவ காரியதரிசி,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்.




பொருள் பண்டம் ஏற்றிக்கொண்டு

போதல் வருதற்குச் சிறந்தவைகள்

## மொறிஸ்—கமமேஷல்

## லொறிகளே (TRUCKS) ஆகும்.



இந்த ரதங்கள் பெரும் பாரமான பொருள்களை ஏற்றிக்கொண்டு, வெகுதூரத்திற்கு வேகமாகச் செல்லத்தக்கவை; நீடித்த காலம் நின்று பிடிக்கக் கூடியவை; எந்தக் கருமத்துக்கும் ஆகிய வண்டிகள் இவைகளே!

மட்டுப்படுத்தப்பட்ட விலை.

2650 ரூபா தொடக்கம் 3450 ரூபா வரையிலுண்டு.

உவாக்கர் ஸன்ஸ் & கம்பனி

கொழும்பு.

யாழ்ப்பாணம்,

முல்லைத்தீவு, மன்னார், திருக்கோணமலை, புத்தளம், அநுராதபுரம் ஆகிய பிரிவுகளுக்கு முழு ஏஜண்டுகளாயுள்ளவர்கள்:-

V செல்வத்துரை & ஸன்ஸ்
ஆஸ்பத்திரி ரோட்டு,
யாழ்ப்பாணம்.

Y 137. 23-9-35. — 18-8-36



கோடைகாலத்திற் பீடிக்கும்

தலைவலியைத் தடுப்பதற்காக

ஒரு போத்தல்

## லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

## தைலத்தை

வாங்கி வைத்திருங்கள்

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்

Y 53. 1-1—31-12-36)



### புகையிலைக்குப் பசளையிடுவது

சரியான முறையில் பசளை யிடுவதினால் மாத்திரமே ஏராளமான பயிரையும் திறமான சாதி இலையையும் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு கொம்மேர்சல் கம்பனியாரின் புகையிலைப் பசளைக்கலவையைச் சரியான முறையாகப் பாவித்தால் விசேஷ லாபகரமான ஆதாயத்தைக் கொடுக்கும்.

முழுவிபரங்களும் இன்னும் வேண்டிய புத்திமதிகளை இலவசமாக அறிந்துகொள்வதற்கும், கொழும்பு கொம்மேர்சல் கம்பனி லிமிற்றெற், கொழும்பு என்றவிலாசத்திற்குஎழுதவும்.

H. 200. 13-11-35 to 12-6-36.)


# அபிசீனிய மன்னரின் மருமகன் தந்திரம்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தில் செய்தி கிடைத்திருக்கிறது. இத்தாலியர் வசமான இடங்களிலுள்ள பல சுதேசித் தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

டைகர் மாகாணத்தில் இத்தாலிய சேனாதிபதி ராஸ்குக்ஸாவைச் சிறை செய்தாரென்ற செய்தி முடிவில் வெளிவந்தது. ராஸ்குக்ஸா இத்தாலியருக்கு விரோதமாகக் கலகத்தை உண்டுபண்ணி விட்டதாக இத்தாலியரே சொல்லுகின்றனர்.

இத்தாலியர் அவரைச் சுட்டு வீழ்த்தி விடலாம்.

ஆனால் அவருடைய வேலை முடிந்துவிட்டது.

கலகம் ஆரம்பமாகி விட்டது. ராஸ்குக்ஸா பிராணத் தியாகம் செய்ய நேர்ந்திருக்கிறது. எனினும் அவர் முஸோலினியின் சவப்பெட்டியில் கடைசி ஆணியை அறைந்து விட்டார்.


# தேவை.

கொடிகாமம் றெயில்வே ஸ்ரேசனுக்குச் சமீபமான கட்டைபறித்தான் பிள்ளையார் கோவிலில் இருக்கும் குருக்கள், மகனுடைய சுகவீனத்தினால் வேலையை விடுகிறார். இன்னொரு பிராமணப்பூசகர் வருகிற மாசிமீ 1-ம் திகதி தொடக்கம் தேவை. இரண்டுகாலப் பூசை; காலையில் ஒருபடி அரிசி நிவேதனம்-பின்னேரம் பழம் பாக்கு வெற்றிலை இரண்டுகாலமும், இருட்டும் வெளிச்சமும் இருக்கும்போது பூசையாக வேண்டும். தினப்படி பூசகர் பொறுப்பு; கோவிலிற்குரியவீட்டிற் குடியிருக்க வேண்டும். சம்பளம் (தொடக்கம்) மாசம் $17\frac{1}{2}$ ரூபா வருஷம் வீதம் $2\frac{1}{2}$ ரூபா கூடி 25 ரூபா வரைக்கும் போகும் கிரமமான சம்பளம் குடும்பத்தோடு இருக்கவும் வசதி கோவிலுக்கருகாமையில் ஆஸ்பத்திரி இருக்கிறது. சுகயீனங்களுக்கெல்லாம் தேவையான மருந்துகள் லேசில் கிடைக்கும்; உடனே எழுதவும்.

சே. சி. குமாரசுவாமி.

கொடிகாமம்
பிருந்தாவனம்
15-1-36.

(Mis 253. 27-1-36)


# விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசபந்திரசாலை.

# அறிவித்தல்.

யாழ்ப்பாணம் நகராங்க எல்லைக்குள் நமது பத்திரிகைச் சந்தாப்பணம் விளம்பரப் பணங்கள் என்பனவற்றை அறவிட ஸ்ரீ R. P. சதாசிவம் என்பவர் நமது பிரதிநிதியாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என்பதை அபிமானிகளுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மனேஜர்.
இந்துசாதனம்.

இந்துசாதனாலயம்
10 - 1 - 36.

# சைவ பரிபாலன சபை.

## 1900--01ம், 02ம் ஆண்டுகளில் நிகழ்ந்தவை.

(20-1-36 ன் தொடர்)

இந்துக்கல்லூரிக்கு 1900ஆண்டு மாசிமீ முதல் C. K. சுவாமிநாதன B. A. என்பவரை ஓர் புறபெசராகவும், மாசிமீ 17உ முதல் வை. குமாரசாமி என்பவரை சைவப்பிரகாசயந்திரசாலைக்கு உதவிமனேஜராகவும், ம. முத்தையா என்பவரை பங்குனிமீ 5உ முதல் கல்லூரிக்கு ஓர் ஆசிரியராகவும் நியமித்தார்கள்.

வண்ணை வைத்தியேஸ்வரசுவாமி கோயில் கிழக்குவீதியிலே வாடகத்துக்கு வாங்கியிருந்த வீட்டிலே நெடுங்காலமாக இருந்த சைவப்பிரகாச யந்திரத்தை 1900 ஆண்டில் இந்துக்கல்லூரிக்கு அணித்தாய்வாடகத்துக்குவாங்கிய ஒருவீட்டிலே வைத்து நடத்தி வந்தார்கள்.

### மகாசபைக் கூட்டம்.

இச் சபையின் வருடாந்த மகாசபைக் கூட்டம் 1900ஆண்டு ஆடிமீ 1உ இந்துக்கல்லூரியிலே கூடிற்று. ஏறக்குறைய நாறுபேர் வந்திருந்தார்கள். சபையின் உப அக்கிராசனாதிபதியாகிய அ. கனகசபை அக்கிராசனாதிபதியாயிருந்தார். 1898—99ம் ஆண்டுகளின் வரவு செலவுக் கணக்கு ஆவேதனம் முதலியன வாசிக்கப்பட்டு அங்கிகாரமாயின. "1900-ம் வருஷத்துக்கு ஸ்ரீ பொ. குமாரசுவாமி அவர்கள் சபையின் போஷகராகவும், ஸ்ரீ த. செல்லப்பாபிள்ளை அவர்கள் அக்கிராசனராகவும், ரூய் பகதார் கு. முருகேசம்பிள்ளை அவர்களும், ஸ்ரீ அ. கனகசபை அவர்களும் உபஅக்கிராசனர்களாகவும், ஸ்ரீ வி. காசிப்பிள்ளை அவர்கள் இலேககராகவும், ஸ்ரீ ச. சபாரத்தினம் அவர்களும் ஸ்ரீ வை. சண்முகம் அவர்களும் உதவி இலேககர்களாகவும், ஸ்ரீ சித. மு. பசுபதிச்செட்டியார் அவர்கள் தனாதிகாரியாகவும், ஸ்ரீ இ. கந்தையா அவர்களும் ஸ்ரீ சி. வேலுப்பிள்ளை அவர்களும் கணக்குப் பரிசோதகர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். மேற்காட்டிய உத்தியோகத்தர் உட்பட 44 அங்கத்தவர்களைக் கொண்ட அதிகாரசபையும், அவருள் 24 அங்கத்தவர்களைக் கொண்ட திருவாகசபையும் நியமிக்கப்பட்டன.

இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் N. செல்வத்துரை 1900ஆண்டு தைமீ முதல் வைகாசிமீ 20உ வரையும் லீவு பெற்றுச் சென்ன பட்டணம் சென்றிருந்தபடியால் J. K. கமசிவாயம்பிள்ளை B. A. தமது கடமையோடு Principal ஆகவும் கடமை பார்த்துவந்தார். ஆனிமீ கு. மா. சண்முகசுந்தரம் என்பவரை ஓர் ஆசிரியராகவும், கார்த்திகை மாசம் முதலாக S. ஐயாசாமி சாஸ்திரிகள் M. A. என்பவரை Vice Principal ஆகவும் நியமித்தார்கள்.

இச்சபையைச் சேர்ந்த சில பிரபுக்களுடைய முயற்சியால், இந்துக்கல்லூரிக் கட்டடநிதியின் நயத்திற்காக ஒரு லொத்தர் 1900ஆண்டு மார்கழிமீ நடத்தப்பட்டது. சீட்டு ஒன்றின் விலை சதம் பத்து. அச்சிட்டு விடப்பட்ட சீட்டுக்களின் தொகை ஒருலக்ஷம். இவற்றுள் விலைப்பட்ட சீட்டுக்களின் பேரால் ரொக்கவரவு ரூ. 7822 சதம் 60. இதில் வெற்றித்துண்டுகள் விழுந்த 850பேருக்கும் ரூ. 3540 பரிசுகளுக்கென வைக்கப்பட்டது. சீட்டுகள் அச்சிட்டதற்கும் ஏனைய சில்லறைச் செலவுகளுக்குமாகச் சென்ற தொகை ரூ. 640 சதம் 25: பரிசுகளுக்கென வைக்கப்பட்ட தொகையில் கேட்டுப் பெற்றுக் கொள்ளாத பரிசுகளின் பேரினாலும், பரிசுபெற்றவர்கள் கொடுத்த நன்கொடையின்பேரினாலும் வந்த வரவு ரூ 925 கல்லூரிக் கட்டட நிதிக்காக எடுக்கப்பட்டதொகை ரூ 8678 சதம் 35. ஆக இவ்விரண்டுவகையாலும் கட்டடநிதிக்கு மொத்த வரவு ரூ 4603 சதம் 35 ஆகும். இந்த லொத்தரை ஆரம்பித்து இனிதுநிறைவேற்றியவர்களுள் இச்சபையின் உதவி இலேககர் வை. சண்முகம், R. N. அருணம்பலம் முதலான இச்சபை அங்கத்தவர்கள் சிலரது ஊக்கமும் சிரத்தையும் அதிகமாகும். இந்த லொத்தர்த்துண்டுகள் விற்பதற்காக இவர்களுட் சிலர் இங்கிருந்து கப்பலேறிக் கொழும்பு முதலான இடங்களுக்குக்கூடச் சிரமத்தையும் பொருட்படுத்தாது சென்றார்களாம் இது இப்படியிருக்க,

மைசூர் மந்திரியாயிருந்த Sir. K. குமாரபுரம் சேஷாத்திரி ஐயர் K. C. S. I. யாழ்ப்பாணம் வந்திருந்த போது 1901ம் ஆண்டு தைமீ 2உ இந்துக்கல்லூரியில் அவரை அழைத்து பெருந்திரளானோர் சமுகத்தில் த. செல்லப்பாபிள்ளை தலைமையில் ஓர் நுதிப்பத்திரம்வாசித்துக்கொடுத்து உபசரித்தார்கள்.

மகாகாருண்ய மகிமைவதியாகிய விக்ரோறியா மகாராணி 1901ம் ஆண்டு தைமீ 22உ இறந்த சமாசாரத்தைக் கேட்டவுடன் இச்சபையார் 26உ த. செல்லப்பாபிள்ளை தலைமையில் ஓர் விசேஷசபைகூட்டி பிரலாபித்துத் தேசாதிபதி மூலமாக இராசகுடும்பத்தவர்களுக்குத் தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்தார்கள், அது இது:—"Resolved that the Saiva Paripalana Sabai on behalf of the Hindu Community place on record its sense of the great loss the British Empire has sustained by the death of Her Most gracious Majesty our beloved Queen Empress Victoria under whose reign the Hindus have enjoyed all blessings of peace, progress and good Government for the unprecedented long period of 64 years.

That the President of the Sabai do wire to His Excellency the sense of the above resolution asking His Excellency to communicate the same to the royal family"

1895ஆண்டு கார்த்திகை மாதம் முதல் இந்துக்கல்லூரியில் Professor of Logic and Mathematics ஆகவும் இடையிடையே Principal ஆகவும் கடமைபார்த்த J. K. கமசிவாயம்பிள்ளை, B. L. பரீக்ஷையில் தேறியபடியால் வக்கீல் உத்தியோகம் பார்ப்பதற்காகப்போலும் 1901 ஆண்டு பங்குனிமாதத்தில் விலகலானார். ச. சிவப்பிரகாசபிள்ளையும் கொத்தாரிஸ் பரீக்ஷையிற்றேறியமையாற் போலும் மாசிமாதத்தில் விலகலானார்.

**Y. M. H. A.** ஆரியகுமார சபை என்னும் பெயரோடு ஆதியிலே தொடங்கியது இந்துக் கல்லூரியிலாகும். "An association for improving the religious condition of Hindu young men has been started under the above name by the students of the Jaffna Hindu College and two meetings have been already held on the 27th April and the other on the 6th May 1901 under the presidency of Mr. Canagasabapathy Iyer of Nallore. The first lecture was on "SaivaSiddhantha" and the other on "Siva". The lecturers dealt with the subjects fully and were much appreciated by the audience Mr. Ayachamy Iyar the Vice Principal of the Jaffna Hindu College has been chosen as the Chairman of the association."

இந்த ஐயாசாமி சாஸ்திரிகள் ஆவணிமீ 1உ இந்துக்கல்லூரியிலிருந்தும் விலகலானார், 19உ முதல் தெல்லிப்பளை இ. கனகசுந்தரம் என்பவரை ஓர் ஆசிரியராக நியமித்தார்கள். இக்கல்லூரிக் கட்டடத்தில் ஓர் பக்கத்திலிருந்த Receiving Office புரட்டாதிமீ முதலாக வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு அணித்தாயுள்ள ஒரு கட்டத்துக்குக் கொண்டு போகப்பட்டு வண்ணார்பண்ணை போஸ்ற் ஆபீசானது. மார்கழிமாத லீவில் சென்னைக்குச் சென்றிருந்த பிரதமாசிரியர் செல்வத்துரை 1902ஆண்டு மாசிமீ கொழும்பு மார்க்கமாகவந்து அங்கு இந்துக்கல்லூரிப் பழைய மாணவர்களையும் நண்பர்களையும் சந்தித்து அவர்களை உற்சாகப்படுத்திக் கல்லூரி வாசக சாலைக்கு அத்தியாவசியம் வேண்டியதாயிருக்க புத்தகங்களுக்குப் பணஞ்சேர்க்குமாறு செய்தார். இதை அவர், —(வரும்)

# கொய்லன் வங்கி (லிமிற்றெட்)

(1919-ம் ஆண்டு திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)

## யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்

( FIXED DEPOSITS )

எங்கள் வங்கியில் க்ஷேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறோம்.

| | |
|---|---|
| 6 மாச காலம் | 3½ விகிதம் |
| 12 மாச காலம் | 4½ விகிதம் |
| 24 மாச காலம் | 5 விகிதம் |

ஏனைய விபரங்களை எங்களிடம் விஞவியறிந்துகொள்ளலாம்.

V. C. ஓமன் B. A.
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36



# N.வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலியவிடங்களில்செய்யப்பட்டஉத்தரவாதமுள்ள சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street, Colombo. Telephone No. 30.

(Y. 56. 8-2—7-2-36) ந



# யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிநி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலவரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "ராஷனல" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்

(Y. 203. 21.11.35—20.11.36) (ந.)



# வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ் (வங்கி)

(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)

2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜாவ்னாபாங்க்" தெலிபோன் இல. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலாயா முதலிய இடங்களுக்கு நேரகவும் உலகத்தில் ஏனைய பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்கப்படும்.

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12 விகித வட்டிக்குப்பணக்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் பேரிலுங் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் நாணயங்கள், நோட்டுக்கள் வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கப்பற்தண்டு:—உலகத்திலுள்ள எந்தப் பிரதான துறைமுகத்திலும்போய் இறங்கத்தக்கதாக, கமிஷனின்றி கப்பற்தண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னுஞ் சகலவித வங்கிமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணநாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ். பி. ஜோசேப்,
மனேஜர்.

(Y. 188. 21.10-35—20-10-36.) ந


## முக்கிய அறிவித்தல்.


அரசாங்க சபைப் பொதுத் தேர்தல் சம்பந்தமான கூட்ட விவரங்கள், அறிவித்தல்கள் யாவும் இப் பத்திரிகையில் விளம்பரமாகவே பிரசுரிக்கப்படும். இவ் விளம்பரங்களுக்கான விகிதம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஒருமுறைக்கு ஒருபந்தி (கலம்) | ரூ. | 10-00. |
| ,, அரைப்பந்தி | ,, | 5-50. |
| ,, கால் பந்தி | ,, | 3-00. |
| ,, 1 அங்குலம். | | -75. |

விளம்பரக் கிரயம் முற்பணமாகவே இறுக்கப்படல்வேண்டும். இவ் விளம்பரங்கள் மானே[illegible] க அனுப்பப்படல் வே[illegible]ம்.

மானேஜர்
இந்துசாதனம்,


## குடைமார்க் ஓடுகள்.



உலகில் உள்ள ஓடுகளில் மிகப் பெரியனவும் மலிந்தனவும் இவையே.

அரசினர்க்குஇவ்வோடுகளைஉதவுவோர்

J. செருபிம் பிறதர்ஸ்,
தனி ஏசண்டர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

H 114 1-8.35 to 31-1-36)



## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபத்திரங்களும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு,சாலாமுஸ்லி,சப்பேமுத்ஸிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், [illegible]செந்தூரம், சாம்பிராணிப[illegible]வம், அநேகபுஷ்டியான [illegible]கைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை,பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயுஇன்னும் அநேக கடுமையான வியாதிகள்தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் ருதுக வாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்துதேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம், சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்ற,
மட்டக்களப்பு
சிலோன்.

Y55 1-1-34 to 31-12-35)



# "இரதி மன்மத" சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0

தபால்சார்ஜ வேறு.

N. B. முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—

மலையாள "சித்த" ஔஷதாஸ்ரமம்,
2 மெயின்ரோட்,
கோல்லம், Quilon S. India.

H 208. 1-12-35 to 31-5-36



திறம் தேக்கமரம் பவுண்மார்க் கொளுக்கி ஓடு.

மிகத்தொகையாக இப்பொழுது வந்திருக்கின்றன.

| | |
|---|---|
| சியம் தேக்கமரங்கள் | ரூபா 2-60சதந் தொடக்கம் |
| றங்கூன் தேக்கமரங்கள் | ரூபா 2-75சதந் தொடக்கம் |

## இன்னொரு பிரதான விளம்பரம்.

நாங்கள் எங்கள் காசுக்கடையில், ஈடுபிடிக்கும் நகைகள் விஷயத்தில் 100 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இதுவரையிலிருந்த 12 விகித வட்டியைத் தவிர்த்து 9 விகிதமாகக் குறைத்துக்கொண்டோம் என்பதாம்.

திறமான பொருள், நேர்மையான வியாபாரம் சகாயமான விலை இவைகளில் எங்கள் கடையே பேர் பெற்றது.

பவுண் "மார்க்" ஓடுகள் விசேஷமானவை

சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
பெரியகடைத்தெரு, பாங்ஷல் வீதி.

(Y 57. 1.5-35to30 4-36.)


## பத்திரக் கிரயம்.

( முற்பணமாக அனுப்புதல் வேண்டும். )

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் | ஆங்கிலம் | இருபிரதிகளும். |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| (நகரசங்க எல்லைக்குட்பட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ்மார்ட்"
89. கோவில்தெரு,
கும்பனித்தெரு.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Propristors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 27th January 1936